# சொல்லாமல் கொல்!

## 1

'விதியும் வெள்ளமும் ஒன்று.

இரண்டும் அகப்படுபவரை அசுரவேகத்தில் இழுத்துச் செல்லும்!'

ஆபீசுக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தான் சரவணன். காலை நேரத்துக்கே உண்டான பரபரப்பு. குளித்து முடித்து தலை சீவிக்கொள்ளும்போதுதான் தெரிந்தன தாடையில் தழைத்திருந்த அந்த முள் முடிகள்!

ஷேவ் செய்துவிட்டு குளித்திருக்க வேண்டும். காலதாமதமாய் எழுந்ததன் எதிரொலி... எல்லாமே மாறிப் போய்விட்டது. சனியன் பிடித்த டி.வி.யை முதல் நாள் இரவில் இரண்டு மணிவரை கண் முழித்து பார்த்தது தப்பு என்று தோன்றியது. எவ்வளவுதான் மனதுக்குள் இதுபோல் தப்புகளை உணர்ந்தாலும் திருத்திக் கொள்ளத்தான் முடியவில்லை.

நெருக்கடி ஏற்படும் சமயங்களில் மனது 'தப்பு தப்பு' என்று பிதற்றி என்ன பிரயோஜனம்?

சாதாரண விஷயங்களில்கூட உறுதியாய் இருக்க முடியவில்லை. அல்ப விஷயங்களில்கூட ஒரு நல்ல திட்டமிடுதல் இல்லை. யூனிஃபார்ம் சட்டைப் பாக்கெட் கிழிந்து அதன் வழியே கூட பல ஒரு ரூபாய் நாணயங்கள் வெளியேற்றம் செய்துவிட்டன. அப்போதெல்லாம் வீட்டிற்கு போனதும் முதல் வேலையாக சட்டையை தைத்துவிட்டுத் தான் மறுவேலை பார்க்கவேண்டும் என்று நினைத்துக் கொள்வதோடு சரி.

வீட்டிற்குள் நுழைந்தாலோ எல்லாமே மாறிப் போய்விடுகிறது. நுழைந்ததும் நுழையாததுமாய் ஈஸிசேரில் சாய்ந்து கொண்டு டீ.வி. பார்க்கத்தான் புத்தி போகிறது. அதன்பின் காபி சாப்பிட்டதும் அப்படியே மலைப் பாம்பு போல படுத்துக்கிடக்கத்தான் முடிகிறது. அதனால் இப்பொழுது காலையில் கால நெருக்கடியும், ஷேவ் செய்ய மறந்த உறுத்தலும் ஏற்பட்டு என்ன பிரயோஜனம்? சரவணனுக்கு அவன் முகத்தைப் பார்க்க அவனுக்கே பிடிக்கவில்லை.

எதற்காக கடவுள் இப்படி ஒரு தாடி மீசையை முகத்திற்களித்தான் என்று ஒரு சன்னக் கோபம்கூட கடவுள் மேல் வந்தது.

கெடிகாரம் வேறு 'டணங் டணங்' என்று சப்தமிட்டு மணி ஒன்பதாகி விட்டதைக் கூறியது. பத்துமணிக்கெல்லாம் ஆபீசில் சீட்டில் இருந்தாக வேண்டும். புதிதாக ஒரு மேனேஜர் வந்திருக்கிறார். காளன் என்று பெயர். அவர் நடந்து கொள்வதைப் பார்த்தால் அவர் காளனில்லை. 'காலன்' என்பதுதான் அவருக்கு பொருத்தமான பெயர் என்று சரவணனுக்கு தோன்றும்.

காலத்தை பொன்னாகத் கருத வேண்டுமாம்.



ஒருநிமிடம் லேட்டாக வந்தால் அன்றைக்கு ஒரு கிராம் தங்கத்தின் விலை எவ்வளவோ அதை அபராதமாகக் கட்டவேண்டும். இல்லாவிட்டால் லீவ் போட்டுவிட்டு போய்விட வேண்டும்.

கண்டிப்பு என்கிற பெயரில் கழுத்தை இறுக்கும் பேர்வழி. அந்த காலனை ச்சீசீ காளனைப் பற்றி நினைக்கும் போதே சரவணனுக்கு மனசு பதறுகிறது. எனவே வீட்டுக்குள்ளேயே ஓடத் தொடங்கினான். திட்டுதிட்டாய் பவுடர் போட்டுக் கொண்டு இன்னமும் தைத்திராத அந்த யூனிஃபார்ம் சட்டையையே திரும்ப எடுத்து மாட்டிக் கொண்டு ஸ்கூட்டரை நோக்கி ஓடினான்.

எதிரில் அவனது இரட்டைத் தங்கைகள் லதாவும், சுதாவும் கோவிலுக்கு போய்விட்டு விபூதி குங்குமக் கீற்றுகள் நெற்றியில் மின்ன எதிரில் வந்தபடி இருந்தனர்.

''அப்பா! பிராகரஷ் ரிப்போர்ட்ல சைன் பண்ணலை'' - என்று மூன்றாம் வகுப்பில் இருக்கும் ஒரே மகள் வீணா பின்னாலேயே செல்ல, ''டேய் டேய்! ஒரு வாடிபனைச் சாப்டுட்டு போடா...'' என்று அவன் அம்மா ஞானத்தின் குரலும் அவனைப் பின் தொடர, ''என்னங்க கொஞ்சம் நில்லுங்க - பெரிய கலெக்டர் உத்தியோகமா பாக்கிறீங்க! ஒரு பத்து நிமிஷம் லேட்டா போனா ஒண்ணும் குடி முழுகிடாது'' - என்று அவன் மனைவி சங்கீதாவும் அவனைத் துரத்த - எதையும் பொருட்படுத்தாமல் ஸ்கூட்டரில் ஏறிக்கொண்டு கிளம்பிப் போயே போய்விட்டான்!

அதைப் பார்த்தபடியே வீட்டுக்குள் நுழைந்த தங்கைகளில் இருந்து அம்மா, மனைவி, மகள் என்று சகலரும் பெருமூச்சுவிட அவன் ஸ்கூட்டரும் தெரு முனையைக் கடந்து விட்டிருந்தது.

சென்னையில் காலை வேளையில் தினமும் டூவீலரில் பயணம் செய்து வேலைக்கு போகிறவர்கள் நிச்சயமாய் பூர்வஜென்மத்தில் ஆளரவமே இல்லாத வனாந் திரத்தில்தான் வசித்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் உட்கார்ந்த இடத்தைவிட்டு நகராதவர்களாய் இருந்திருக்க வேண்டும்.

அவர்களுக்குத்தான் மறுபிறப்பு சென்னையில் அமைந்து டிராஃபிக்கில் சிக்கிச் சீரழியும் ஒரு சாபம் ஏற்பட்டிருக்கும்.

அதிலும் காலை வேளையில் தி.நகரிலிருந்து கோடம்பாக்கம் நெடுஞ்சாலை வழியாக வடபழனி போவது என்பது நிச்சயமாய் காலில்லாதவன் கையாலேயே மலை ஏறுவதுபோல ஒரு கஷ்டமான அனுபவம்.

கலப்படப் பெட்ரோலின் கர்ண கடூரப்புகை, காதைச் சவட்டும் மோட்டார் வாகன இரைச்சல், இதற்கு நடுவில் கண்ணுக்கு பளிச்சென்று தெரியும் விதத்தில் அந்த சாலை மேல் குறுக்கும் நெடுக்குமாய் நடந்தபடி இருக்கும் எமன் என்று எத்தனையோ விஷயங்களை சமாளிக்க வேண்டி யிருக்கிறது?

இத்தனை சமாளிப்புக்குப் பிறகு ஒரு போட்டியில் வெற்றிக் கோட்டை தொடுகிற மாதிரி ஆபீசுக்குள் நுழையும் போது உடம்பில் முக்காலே மூணு வீச சக்தி ஆவியாகப் போய்விடுகிறது. அதன்பிறகு அந்த கால்பாக சக்தியோடு எந்த வேலையை உற்சாகமாய் பார்க்க முடியும்? ஓ.பி. அடிக்கத்தான் மனது முயற்சி செய்யும்.

இந்தியா முன்னேற மாட்டேன் என்கிறது என்றால் எப்படி?



சரவணனும் தூக்கக் களைப்பு, பிரயாண அலுப்பு என்று ஆபீசுக்குள் நுழைந்தபோது ஆபீசே பரபரப்பில் இருந்தது.

ஆபீசின் தினத்தந்தி என்று வர்ணிக்கப்படும் சதாசிவம் வந்து சரவணனின் காதைக் கடித்தான்.

''விஷயம் தெரியுமா சரவணா?''

''நாலு நாள் லீவுக்குப் பிறகு நான் இப்பத்தான் உள்ள நுழையறேன். என்ன விஷயம் சொல்லு?''

''வி.ஆர்.எஸ். அனவுன்ஸ் பண்ணியிருக்காங்க!'' சதாசிவம் சொல்ல, வெடுக்கென்று நிமிர்ந்தான் சரவணன்.

''நிஜமாவா?'' - ஆச்சரியம் + அதிர்ச்சியை தொனியில் கலந்து கேட்டான்.

''ஆமாம்... நம்ம பி.எஃப்., கிராஜிவிடி போக சாலிடா மூணு லட்சம் தந்துடுவாங்களாம். நாம எழுதிக் கொடுத்துட்டு வீட்டுக்கு போய்டணுமாம்!''

''அடக் கொடுமையே... ஆமா... எவ்வளவு வரும்?''

''அது வரும் தலைக்கு அஞ்சாறு லட்சம்.''

''அதை வெச்சுகிட்டு என்ன பண்றது? பேங்க்ல போட்டா முழுசா ஆறாயிரம் வட்டிகூட வராதே.''

''அதப்பத்தி அவங்களுக்கென்ன...? ஆபீஸ்ல நூறு பேரை குறைக்கணுமாம். மேனேஜ்மெண்ட்ல டார்கட் ஃபிக்ஸ் பண்ணியிருக்காங்க. லிஸ்ட்ல நீயும் இருக்கே. கொஞ்ச நேரத்துல பார்... பர்சனல் மேனேஜர் கூப்ட்டு உடுவான். உன்னை எழுதிக் கொடுக்கச் சொல்வான்.''

''நான் முடியாதுன்னு சொல்லிடுவேன்.''

''அப்படின்னா அவுரங்காபாத், அஸ்ஸாம், நாகலாந்துன்னு டிரான்ஃபர் பண்றேன்னுவான். போறியா?''

''சதா... நான் என்ன பாவம் பண்ணேன்? எதுக்கு என் வயித்துல இப்படி புளியைக் கரைக்கறே...''

''நான் கரைக்கிறது புளின்னா, பி.எம். கரைக்கப் போறானே அதை என்னான்னு சொல்வே? அமிலத்தையே கரைக்கப் போறாண்டா...''

-சதாசிவம் நக்கலாக சொல்லிவிட்டு விலக சரவணனுக்கு நெஞ்சில் அதிர்ச்சி பரவியது. வேலையை ஆரம்பிக்கவே தோன்றவில்லை. பக்கத்து சீட் ஹெட் கிளார்க்கூட முணுமுணுத்தபடி வேலையில் நுழைய மனமில்லாதபடி பெண்டாட்டிக்கு போன் போட்டு புலம்பிக் கொண்டிருந்தார்.

'கடவுளே... என்ன இது சோதனை?'

-சரவணனுக்குள் கவலை நுழைந்தால் நெற்றிக்குமேல் வியர்க்கும். தலைவலியும் வந்துவிடும். இப்பொழுதும் வந்தது. கூடவே காணாமல் போன அப்பா, ஒருவனோடு ஓடிப்போன அக்கா, கல்யாணத்திற்கு காத்திருக்கும் தங்கைகள் என்று எல்லோர் முகமும் ஞாபகத்திற்கு வந்தது. குறிப்பாக இன்னும் அவன் இடுப்பு உயரம்கூட வளர்ந்திருக்காத மகள் வீணாவின் முகம் தோன்றி 'அப்பா நான் இப்பத்தான் மூணாங்கிளாசுக்கே வந்துருக்கேன். எலிமிண்ட்ரி, ஹைஸ்கூல், காலேஜ் அப்புறம் கல்யாணம்னு எனக்கு நீ நிறைய செலவு செய்ய வேண்டியிருக்கு. வேலையை விட்றாதே. அப்புறம் நான் சத்துணவு சாப்பிட்ற குழந்தையா கார்ப்பரேஷன் ஸ்கூல்லதான் படிக்க வேண்டியிருக்கும்' - என்று விசும்பிக் கொண்டே சொல்கிற மாதிரி தோன்றியது.



தலையை உசுப்பிக் கொண்டான். வேலையில் சேர்ந்து பத்து வருஷம்கூட ஆகவில்லை. வயதும் 35தான் ஆகிறது. இன்னும் 23 வருஷ சர்வீஸ் இருக்கிறது. அதற்குள் இப்படி ஒரு குண்டா?

அவன் கேள்விக்கு பின்சீட் அலெக்சாண்டரிடம் இருந்து பதில் வந்தது.

''என்ன சரவணன்... வி.ஆர்.எஸ். லிஸ்ட்ல பேர் இருக்குன்னு சொன்ன உடனே கவலையா இருக்கா? என் பேரும் இருக்கு. 'பத்துலட்சம் தாங்க. வெளிய போறதப்பத்தி யோசிக்கறேன்'னு சொல்லப் போறேன்'' என்றபடி ஒரு பாக்குப் பொட்டலத்தை பிரித்து வாயில் போட்டுக் கொண்டார்.

சரவணனும் முதுகை வளைத்துத் திரும்பி அவரைப் பார்த்தான்.

''எதனால் சார் இப்படி வி.ஆர்.எஸ். பூதத்தை காட்டி பயமுறுத்தறாங்க?'' - என்று கிணற்றுக் குரலில் கேட்டான்.

''ஒரு சின்ன கரெக்ஷன். இதுக்கு பேர் வி.ஆர்.எஸ். இல்லை. அந்த சதாசிவம் ஒரு அரைகுறை ஆளு. இதுக்கு பேர் ஈ.ஆர்.எஸ். அதாவது எர்லியர் ரிட்டையர்மென்ட் ஸ்கீம்! அப்புறமா இது நம்ம விருப்பத்தை சார்ந்த ஒண்ணுதான். இருந்தாலும் அதைச் சொல்லாம சும்மா லிஸ்ட்டு, பேருன்னு பூச்சாண்டி காட்றாங்க...''

''அதான் ஏன்...? எல்லாத்தையும் அனுப்பிட்டு எப்படி ஆபீசை நடத்துவாங்க?''

''அந்த கவலை நமக்கெதுக்கு? கேட்டா பிசினஸ் டல், புராடக்ட் விலையைக் குறைச்சுக் கொடுத்தாதான்

வியாபாரம் பண்ண முடியும் - போட்டி அதிகமாயிடிச்சுன்னு ராமாயணம் படிப்பாங்க...''

''பிசினஸ் டல்லா?''

''அதுல கொஞ்சம் உண்மை இருக்குதான். இப்பதான் இந்தியாவுல எவன் வேணா வந்து கடை போடலாமே? அதனால சீனாக்காரனும், கொரியாக்காரனும் உள்ள நுழைஞ்சிட்டாங்க. நம்ம கம்பெனி புராடக்ட்டான கண்டன்சர் விலை முன்னூத்திச் சில்லறை. ஆனா அவங்க இருநூறு ரூபாய்க்கு தரத் தயாரா இருக்காங்க. வாங்கறவங்க அதைத்தானே வாங்குவாங்க?''

''நிஜமாவா?''

''என்னய்யா கேள்வி இது... நாட்டு நடப்பே தெரியாத மாதிரி கேட்கிறியே. பேப்பர் படிக்கறதில்லையா... இல்ல நியூஸ் பார்க்கறதில்லையா?''

''இதையெல்லாம் யார் கண்டா? நியூஸ் டைம்ல வேற சேனல்ல சீரியல் ஓடினா நான் அதுக்குத் தாவிடுவேன்.''

''அதான் காட்டுல இருந்து வந்தவன் மாதிரி கேள்வி கேட்கறே. இனியாவது சீரியல் பாக்காம நியூஸ் பாருய்யா. எல்லாம் புதிய பொருளாதாரக் கொள்கை படுத்தற பாடு.

கவர்ன்மெண்ட் கைலையே காசு இல்லை. முதலமைச்சரே சைக்கிள்ல சட்டசபைக்கு போற அளவுக்கு நிலைமை வரப்போகுது. பாத்துகிட்டே இரு.''

- அலெக்சாண்டர் - சதாசிவம் தேவலை என்கிற மாதிரி பயமூட்டினார்.

சரவணனுக்கு உடம்பெல்லாம் நடுங்கத் தொடங்கியது. இருந்தும் சுதாரித்தபடி ''அப்ப எனக்கு இஷ்டமில்லைன்னு சொன்னா ஒண்ணும் சொல்ல மாட்டாங்க தானே?'' என்று அப்பாவியாய் கேட்டான்.



''யாருக்கு தெரியும்... இனிமே யாரா இருந்தாலும் நில்லா இருந்தாதான் பொழைக்க முடியும். அதிக பட்சம் கொலை செய்யக்கூடத் தயங்கக்கூடாது. இல்லாட்டி நம்மளை எவனாவது குத்திக் கொன்னுடுவான். அதான் இப்ப நிலை!''

- அலெக்சாண்டர் முடிவாய்ச் சொன்னது சரவணனை ஒரு உலுக்கு உலுக்கியது. அப்படியே முதல்நாள் கைரேகை ஜோசியம் பார்த்ததும் ஞாபகத்துக்கு வந்தது.

பீச்சுக்கு போன இடத்தில் ஒரு கை ரேகை ஜோசியம் பார்ப்பவன் விடாமல் துரத்தி உயிரை வாங்கி விட்டான். ''எதிர்காலத்தை புட்டுப் புட்டு வைக்கறேன் சார். சரியா இருந்தா காசு தாங்க. இல்லாட்டி போய்கிட்டே இருங்க'' - என்று சரவணனை வளைத்துப் பிடித்து கையையும் நீட்டும்படி செய்து விட்டான். பிறகுதான் கிலியே ஆரம்பமானது.

''ஆஹா... என்ன ஒரு கை இது... லட்ச லட்சமா சம்பாதிக்கப் போறீங்க சார். கார், பங்களான்னு ஜமாய்க்கப் போறீங்க. தனரேகை அவ்வளவு அழுத்தமா இருக்கு.'' - என்று முதலில் சரவணனை உச்சாணிக் கொம்பில்தான் ஏற்றினான். ஆனால் கடைசியில்தான் காலை வாரி விட்டான்.

''எதுக்கும் கொஞ்சம் ஜாக்ரதையா இருங்க சார். ஆயுள்ரேகை மேல ஒரு கறுப்புப் புள்ளியும் வெட்டும் விழுந்திருக்கறதாலையும், பாம்பு படம் எடுக்கற மாதிரி ஒரு ரேகை சந்திரமேட்டுல தெரியறதாலையும் உங்களை மீறி

நீங்க கொலை செய்யற அளவுக்கு போயிடுவீங்க. தினம் பிள்ளையாருக்கு விளக்கு போட்டு விழுந்து கும்புடுங்க. எல்லாம் சரியாயிடும்'' - என்று சொல்லி விட்டுப் போயிருந்தான்.

'ஜாக்ரஃபி சேனலில் புலி மானை அடித்துச் சாப்பிடுவதைக் கூட பார்க்க தைரியமில்லாத நானா கொலை செய்யும் எல்லைக்குப் போவேன்... தேவுடா?' - மனது கேள்வியில் விழுந்து அரற்றியது.

இப்பொழுது அலெக்சாண்டர் சுருதி சேர்த்துவிட்டார்.

'கடவுளே...!' சரவணன் மனதுக்குள் அப்படியே சுருண்டு படுத்துவிட்டான்.

## 2

'வாழ்க்கை அதன் போக்கில் போய்க் கொண்டிருப்பது போலத்தான் தோன்றும். ஆனால் ஒரு விநாடி போதும் அதற்கு... திருப்பங்களை ஏற்படுத்த!'

மணி மதியம் மூன்று!

ஞானம் அரிசியில் கல் பொறுக்கிக் கொண்டிருந்தாள். சங்கீதா துவைத்த துணிகளை வெளியே கொடியில் காயப்போட்டுக் கொண்டிருந்தாள். லதாவும், சுதாவும் மாத நாவலில் தங்களை மறந்திருந்தனர்.

யாரோ ஒருவர் குடையும் கையுமாக அந்த வீட்டுக்குள் நுழைந்து ''தம்பி இல்லீங்களா?'' - என்று ஆரம்பித்தார். நிமிர்ந்த ஞானம் ''வாங்கய்யா...'' - என்று அவருக்கு

37671 5469247



இருக்கையை காட்டினாள். அவரும் போய் உட்கார்ந்தபடி 'அப்புறம்... எப்படி இருக்கீங்க?'' - என்று ஆரம்பித்தார். ''நல்லா இருக்கோம்யா...'' - இது ஞானம். அப்போது சங்கீதாவும் பிளாஸ்டிக் பையுடன் துணியை உலர்த்தி முடித்த கையோடு உள்ளே நுழைந்து அவரைப் பார்த்து சிரித்தாள். அப்படியே ''வீட்டு வாடகையை இந்த தடவை கரெக்டா ஒண்ணாம் தேதியே கொடுத்துட்டோமே...'' - என்று சொன்னபோதுதான் அவர் வீட்டுக்காரர் என்று ருசுவாயிற்று.

''நான் வாடகைக்காக வரலைம்மா. அதை எல்லாம்தான் சோத்துக்கு இருக்கோ இல்லியோ கரெக்டா கொடுத்துட்றீங்களே...'' - என்று அந்த குடை மனிதர் பீடிகை போட்டார்.

''அப்ப என்ன விஷயம்னு நீங்கதான் சொல்லணும்.'' - இது ஞானம்.

''சொல்றேன் சொல்றேன்... என் மூத்த மகன் தியாகு பத்தி உங்களுக்கு தெரியும்னு நினைக்கறேன்.''

''சொல்லுங்க... அவரைத்தான் எங்களுக்கு நல்லா தெரியுமே...''

''சந்தோஷம். அவன் இப்ப ஆந்திரா பக்கம் கம்மம் ஜில்லாவுல இருக்கான். பேங்க் உத்தியோகம் பாருங்க. அவனுக்கு இப்ப டிரான்ஃஸ்பர்! அதுவும் நாங்க இருக்கற இந்த சென்னைக்கு...''

- அவர் என்ன சொல்ல வருகிறார் என்பது ஞானத்துக்கு பளிச்சென்று புரிந்துவிட்டது.

''அப்ப உங்க பையனுக்கு வீடு வேணும். அதனால எங்களை காலி பண்ணச் சொல்றீங்களா?'' - என்று நறுக்கின மாதிரி கேட்டாள்.

''ஆமாம்மா... நான் இருக்கற வீடு புருஷன் பொண்டாட்டி எங்களுக்கே பத்தலை...'' - அவர் யதார்த்தத்தைச் சொன்னார்.

''சரி... சரவணன் ஆபீஸ் போயிருக்கான். வரட்டும் சொல்றேன்.''

''நான் வேணும்னா ஆபீசுக்கே போன் போட்டு சொல்லிட்றேன். நம்பர் இருந்தா தாங்க.''

''இல்ல... வேண்டாம். ஆபீஸ்ல அவனுக்கு ஏகப்பட்ட டென்ஷன். எதையாவது ஞாபகப்படுத்த நாங்க போன் பண்ணினாலே கத்துவான்.''

''நல்லது. நீங்களே சொல்லிடுங்க. இன்னொரு விஷயம்.'' - திரும்பவும் அந்த வீட்டுக்காரர் சுருதி சேர்த்தார். என்ன என்கிற மாதிரி குடும்பமே பார்த்தது.

''காலி பண்றேன். ஆனா எனக்கு ஒரு ஆறுமாசமாவது வேணும்னு தவணை கேட்கக் கூடாது. ஏன்னா என்மகன் இன்னும் 15 நாள்ல சென்னை வந்துடறான். வேணும்னா ஒரு மாசம் உங்களுக்கு டைம் தரேன். என்னடா இப்படி சொல்றேனே இது சரியான்னு கேட்காதீங்க. நான் வீட்டுக்காரன் மாதிரி உங்ககிட்ட பழகினதில்ல. உங்ககிட்ட அட்வான்லே வாங்கிக்காம வாடகைக்கு விட்டுக்கேன். காரணம் உங்க குடும்ப கஷ்டம். நீங்க அட்ஜஸ் பண்ணனும். இதை ஞாபகத்துல வெச்சுட்டு உதவி பண்ணுங்க. வரட்டுமா?''

-அவர் கிளம்பினார். எல்லோர் முகத்திலும் கிட்டதட்ட இருட்டு.



பர்சனல் மேனேஜர் கூப்பிடுவதாய் அட்டெண்டர் வந்து சொன்னான். சரவணனை பதற்றம் தொற்றிக் கொண்டது. இருந்தும் ஆண்மை முறுக்கு அதை அடக்கிப்பிடிக்க - எழுந்து அவர் அறை நோக்கிச் சென்றான். உள்ளே நுழைந்து அவர் எதிரில் நின்றான்.

''குட்மார்னிங் சார்!''

''வெரிகுட் மார்னிங். வாங்க. உக்காருங்க.''

- உட்கார்ந்தான். கூர்மையாக பார்த்தான்.

''நோட்டிஸ் போர்ட் பாத்திங்களா?''

''பாத்தேன் சார்...''

''உங்க அபிப்ராயம் என்ன?''

''சாரி சார்... வேலை இல்லாத ஒரு நிலையை என்னால நினைச்சே பார்க்க முடியல சார்...''

''தப்பு சரவணன். ரொம்ப தப்பு... வேலையில்லாத நிலை உங்களுக்கு வந்துட்டதா ஏன் நினைக்கறீங்க? அதான் காம்பன்சேஷன் தரோமே... அதை வெச்சு எவ்வளவோ பிசினஸ் பண்ணலாமே.''

''திரும்பவும் சொல்றேன் சார்... எனக்கு அதுக்கெல்லாம் சாமர்த்தியம் கிடையாது.''

''அப்ப நீங்க ஒரு யூஸ்லெஸ் ஆளா?'' - பி.எம். மடக்குகிறார் என்பது அவனுக்கு தெரிந்தது.

''இல்ல சார். நீங்க தப்பா புரிஞ்சுக்கிட்டீங்க. நான் பிசினசுக்கு ஏத்தவன் இல்லன்னுதான் சொன்னேன். இங்க நான் என் வேலையை ஒழுங்காதான் பார்க்கறேன்.''

''அப்படியா... அப்ப ஈ.ஆர்.எஸ். உங்களுக்கு வேண்டாம். அப்படித்தானே?''

''நிச்சயமா சார்...''

''நல்லா யோசியுங்க. உங்களுக்கு இரண்டு சிஸ்டர் இருக்காங்கன்னு எனக்குத் தெரியும். அவங்களுக்கு அலயன்ஸ் பாத்துகிட்டிருக்கறதும் எனக்குத் தெரியும். அப்ப பணத்துக்கு எங்க போவீங்க?''

''அதுக்காக இந்த ஈ.ஆர்.எஸ்.ஐ ஒத்துக்க சொல்றீங்களா?''

''இந்த ஈ.ஆர்.எஸ். உதவும் இல்லையா?''

''அப்ப பிசினஸ் எப்படி சார் பண்ண முடியும்? குடும்பம் எப்படி சார் நடத்த முடியும்?''

''எப்பவும் வாழ்க்கை எல்லாமே கிடைச்சுடாது சரவணன். ஒண்ணை இழந்தாதான் ஒண்ணு கிடைக்கும்.''

''அதுக்காக கண்ணை இழந்து நான் சித்திரம் வாங்க பிரியப் படலை சார்.''

''ஓ... பழமொழியைச் சொல்லி என்னை கட்டிப் போடப்பாக்கறீங்களா?''

''அப்படி இல்லை. என் உணர்ச்சி உங்களுக்கு புரியதுக்காக அப்படிச் சொன்னேன்.''

''சரி... நானும் என் உணர்ச்சியை உங்களுக்குப் புரியவைக்க சில விஷயங்களைச் சொல்றேன். என்கிட்ட பேசின மாதிரி நீங்க நம்ம மேனேஜிங் டைரக்டர்கிட்ட பேசமுடியாது. அவர் உங்களைக் கூப்பிட்டு ஈ.ஆர்.எஸ். பத்திகேட்டா என்ன சொல்லணுமோ சொல்லிக்குங்க.

கப்பல் மூழ்கிக்கிட்டிருக்கு. ஈ.ஆர்.எஸ். ங்கறது உங்களுக்கான தப்பிக்கற படகு. அப்புறம் இந்த படகும் இல்லேன்னு ஆயிடும்.''



- பி.எம். சொன்ன பதில் உதாரணத்தில் சரவணனுக்கு மூச்சிரைத்து. முழித்தான். எழுந்து வெளியில் வந்தான்.

அலெக்ஸாண்டர் பார்த்துக் கொண்டேயிருந்தார்.

அவன் வரவும் நெருங்கினார். விசாரிக்கத் தொடங்கிவிட்டார்.

''என்ன சரவணா... என்ன சொன்னான் பி.எம்.?''

''சேர்மன்கூட பேசவேண்டி இருக்கும்னு சொல்லிட்டார் சார்.''

''ரொம்ப சௌகர்யமா போச்சு. சேர்மன்கிட்ட பேசும்போது இரண்டுவழி இருக்கு. ஒண்ணு கால்ல விழுந்து காப்பாத்துங்க சார்னு அழற வழி... இன்னொண்ணு 15 லட்சம் தந்துடுங்க சார் போயிட்றேன்னு சொல்றது. கவலைப்படாதே. பிரச்சினை சீக்கிரமா முடிஞ்சிடும்.''

- அலெக்ஸாண்டர் நகர்ந்து கொண்டார். தைரியமான பேர்வழிதான். துளிகூட அவர் மனதில் படபடப்பே இல்லை. எப்படி இருக்க முடிகிறதோ தெரியவில்லை.

ஆனால் சரவணனுக்கு நடுங்கியது. எதிர்காலமே ஆட்டம் ஆடுகிற மாதிரி தோன்றியது. வளர்ப்பு அப்படி. சீட்டில் வேலையே ஓடவில்லை. செக்குமாடு கணக்காக மனசு ஈ.ஆர்.எஸ். ஐயே சுற்றிச் சுற்றி வரத் தொடங்கியது.

புரோக்கர் கல்யாண சுந்தரம் சரவணன் வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தார்.

வீட்டுக்குள் யாரிடமும் உற்சாகமேயில்லை. எல்லோர் முகமும் வீட்டுக்காரர் போட்ட போடில் இருண்டு போயிருந்தது. ஞானம் மட்டும் நிமிர்ந்து பார்த்துப் பேசினாள்.

''என்ன கல்யாண சுந்தரம், என்ன விஷயம்?''

''ஒரு புரோக்கர் எதுக்கும்மா வீட்டுக்கு வருவான்? உங்க இரண்டு பெண்களுக்கும் ஒரு நல்ல இடம் வந்துருக்கும்மா.''

''அப்படியா...?'' - ஞானம் ஏதோ மாடு கன்னு போட்டதைக் கேட்டுக் கொள்வது போலத்தான் கேட்டுக் கொண்டாள்.

''என்னம்மா நீங்க... நான் ஒரு நல்ல சேதி சொல்றேன். அப்படியான்னு கேட்டா என்ன அர்த்தம்?''

''நல்ல சேதிதான். ஆனா இங்க நல்ல நேரம் ஒண்ணு இருந்தாதானே அது உறைக்கும்?''

''என்னம்மா சொல்றீங்க?''

''இங்க குடி இருக்கற வீட்டைக் காலி பண்ணுன்னு வீட்டுக்காரர் சொல்லிட்டார். சரவணனுக்கும் ஆபீஸ்ல ஏகப்பட்ட குடைச்சல். இன்னும் இரண்டு மூணு வருஷத்துக்கு கல்யாணம் பத்தி யோசிக்க முடியாது.''

''அப்படி சொல்லாதீங்க. இந்த இடத்தை பத்தி கேட்டீங்கன்னா விடமாட்டீங்க.''

''யாரா இருந்தா என்ன? இன்னிக்கெல்லாம் குறைஞ்சது பத்து பவுனாச்சும் போடணுமா இல்லையா?''

''அது வாஸ்தவம்தான். ஆனா பத்து பவுன் போட்டாலும் காலத்துக்கும் பிரச்சினை இல்லைன்னா தலையைக்கூட அடகு வைக்கலாமே?''

''அப்படி யார் இப்ப அவசரப்பட்றாங்க?''

''எல்லாம் உங்க தூரத்து சொந்தக்காரங்கதான்...''

''தூரத்து சொந்தமா...? யார் அது?''



''அதாங்க கும்பகோணம் செங்கமலத்தம்மா குடும்பத்தவங்க...''

''அவங்களா?'' - ஞானத்தின் முகம் கேள்வியோடு பிரகாசிக்கத் தொடங்கியது.

''அவங்களே தான். நம்ப முடியலையா?''

''எப்படி நம்ப முடியும்...! அவங்க லட்சாதிபதிங்க. பசங்களும் அமெரிக்கால வேலைல இருக்கறவங்க!''

''ஆமாங்க... அண்ணன் பாஸ்கர், தம்பி தினகர் இரண்டு பேருக்கும் உங்க பொண்ணுங்க லதா, சுதாவை கேக்கறாங்க. என்ன சொல்றீங்க?''

- புரோக்கர் அழுத்தமாகவே கேட்டார். ஞானம் திணறத் தொடங்கினாள். மருமகள் சங்கீதாவும் வந்து நின்று கொண்டு புரோக்கரை பார்த்தாள்.

''என்னம்மா பாக்கற...? நல்ல சந்தர்ப்பம்மா... விட்ற வேண்டாம்னு உங்க அத்தைகிட்ட சொல்லும்மா...''

''வாஸ்தவம்தான். ஆனா பெரிய இடம். நிறைய எதிர்பார்ப்பாங்களே.''

''அதான் இல்லை. போட்றத போட்டு நல்லா கல்யாணம் பண்ணிக் கொடுத்தா போதும்னு சொல்றாங்க.''

''நம்பவே முடியலயே...''

''நேரம் காலம்னு வந்தா அப்படி எல்லாம்தாம்மா நினைக்க வைக்கும். சும்மா தைரியமா சொல்லுங்க சரின்னு... இந்த சந்தர்ப்பத்தை விட்டா ஒரு சந்தர்ப்பம் வரவே வராது. அந்த இரண்டு பசங்களும் தங்கமான பசங்க. உங்க பொண்ணுங்கள கோவில்ல பாத்திருக்காங்க. ரொம்ப பிடிச்சுப் போச்சு. மனசுக்கு பிடிச்சுட்டா காசு பணம் இரண்டாவது தானே?''

- புரோக்கரின் பீடிகை ஞானத்தை அசைத்தது. லதாவும் சுதாவும்கூட ஞானத்தை ஆசை விழிகளோடு பார்த்தனர்.

'அம்மா... சரின்னு சொல்லும்மா...' - என்று கண்ணாலேயே கோரிக்கை மனுப் போட்டனர். ஞானமும் அசைந்தாள்.

''சரி... என் பையன் வரட்டும். பேசிட்டு உங்களுக்கு ஒரு நல்ல பதில் சொல்றேன்.''

- புரோக்கர் கல்யாண சுந்தரம் வந்த வேலை முடிந்த சந்தோஷத்தோடு திரும்பத் தொடங்கினார்.

## 3

'இன்பமோ துன்பமோ... காலம் ஒருவருக்கு அதைக் கொடுக்கத் தொடங்கிவிட்டால் யாராலும் தடுக்க முடியாது. மனிதர்கள் அதில் அகப்பட்டு ஆடித்தான் தீரவேண்டும்!'

மாலை முடிந்து இரவின் ஆக்ரமிப்பில் வானம் கருமை நிறமடையும் வேளை... சரவணனின் ஸ்கூட்டர் வீட்டுமுன் உறுமலோடு நின்றது. அதை ஓரம் கட்டி விட்டு களைப்போடு நுழைந்தான்.

காத்துக் கொண்டிருந்தனர் அவ்வளவு பேரும்.

ஒவ்வொருவர் கண்ணிலும் ஒவ்வொரு சேதி.

சங்கீதா - அவன் சேரில் வந்து அமரவும் காபியைத் தந்தபடி பேச்சை எடுத்தாள்.

''ஒரு முக்கியமான விஷயங்க.''



''நானும் ஒரு முக்கியமான விஷயத்தை சொல்லணும். சங்கீ...''

''அப்ப நீங்க சொல்லுங்க.''

''இல்ல... நீ முதல்ல சொல்லு...''

''இல்ல நீங்க சொல்லுங்க...''

''நான் சொல்றத கேட்டா மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருக்கும் சங்கீ. நீ சொல்லு...''

- அவன் சொன்ன விதமே அனைவரையும் மிரட்டிற்று. ஆளாளுக்கு பேந்தப் பேந்த பார்த்தனர்.

''அப்ப அந்த கஷ்டமானதை சொல்லிட்றா சரவணா. அப்புறமா நாங்க விஷயத்துக்கு வரோம்.'' - ஞானம் அவன் எதிரில் பேச்சோடு வந்து அமர்ந்தாள்.

''நீங்க ஆளாளுக்கு பாக்கறத பார்த்தா விஷயம் பெரிசா இருக்கும் போலத்தான் தெரியுது..''

''ஆமாண்டா... ஒரு பிரச்சினைக்கு இரண்டு பிரச்சினை...''

''அப்படியா... அப்ப அதோட என் பிரச்சினையையும் சேர்த்துக்க. மூணு பிரச்சினை.''

''என்னடா சொல்றே... பிரச்சினை அது இதுன்னு...''

''நான் சொல்லலை. நீதான் சொன்னே பிரச்சினைன்னு. அதுவும் இரண்டு பிரச்சினைன்னு சொன்னே.''

''ஆமாண்டா... ஒன்னு வீடு காலி பண்ணனும். அதுவும் ஒரு மாசத்துக்குள்ள. அடுத்தது உன் இரண்டு தங்கச்சிங்களுக்கும் வரன் வந்திருக்குது. அதுவும் நினைச்சுப்பாக்க முடியாத இடத்துல இருந்து.

இரண்டுமே செலவு விஷயங்கள். நம்ம குடும்ப நிலைமை எனக்கு நல்லா தெரியும். நீ எப்படி சமாளிக்கப் போறியோ தெரியல... ஆமா... உன் பிரச்சினை என்ன?''

- சரவணன் உடனே மிடறு கட்டினான். கண்களை அகட்டி விரித்தான். நெற்றியைச் சுருக்கி ரேகைகள் விழும்படி செய்தான்.

''சொல்லுடா... நீ என்னத்த சொல்லப் போறே?''

''ஆபீஸ்ல எழுதிக் கொடுத்துட்டு போகச் சொல்றாங்க.''

''என்னடா சொல்றே... நீ என்ன தப்பு பண்ணினே?''

''நான் ஒண்ணும் தப்பு பண்ணலை. இது நம்ம நிதியமைச்சர் பண்ண தப்புன்னு எல்லாரும் சொல்றாங்க.''

''எதுக்கு எதடா முடிச்சு போட்றே?''

''அப்படி இருக்கும்மா இன்னிக்கு நிலைமை. கம்பெனில வியாபாரம் சரியில்லையாம். ஆகையால ஆள் குறைப்பு செய்யணுமாம். நூறு பேரை வீட்டுக்கு அனுப்பினாதான் கம்பெனி நடத்த முடியுமாம்.''

''அப்ப உன் வேலை போயிடுமா...?''

''தெரியாது. ஆனா போற நிலைலதான் இருக்கு. அஞ்சாறு லட்சம் காம்பன்சேஷன் கிடைக்கும். அவ்வளவு தான்!''

- அவன் வாயை மூட - குறுக்கில் விழுந்து அலறத் தொடங்கினாள் சங்கீதா.

''அது எந்த மூலைக்குங்க. அதெல்லாம் முடியாதுன்னு சொல்லுங்க.''



''பின்ன... சரிசார்னா சொல்வேன். முடியாதுன்னுதான் சொல்லியிருக்கேன்.''

''அப்புறமென்ன... சட்டப்படி உன்மேல நடவடிக்கை எடுக்க முடியாது தானே?''

''முடியாதும்மா.. இது விருப்பம்தான். ஆனா இதை விரும்பாதவங்களால உள்ள நிம்மதியா வேலை பார்க்க முடியாது. டார்ச்சர் பண்ணுவாங்க. தாங்கிக்கிட்டு வேலையை கண்ட்டினியூ பண்றது ரொம்ப கஷ்டம்.''

''சரி என்னதான் பண்ணப் போறே?

''தெரியலம்மா... தெரியல. ஒரே குழப்பமா இருக்கு.''

''இப்படி சொன்னா எப்படிடா... எதாவது ஒரு முடிவு செய்துதானே தீரணும்?''

''ஆமாம்... காசை வாங்கிக்கிட்டா ஆபீஸ் பிரச்சினை தீர்ந்துவிடும். தங்கச்சிங்க கல்யாணமும் முடிஞ்சிடும். ஆனா எங்க எதிர்காலம்?''

''நல்லவங்களுக்கு நல்லதுதாண்டா நடக்கும். உன் எதிர்காலம் அமோகமாத்தான் இருக்கும்.''

''அப்ப அவரை எழுதிக் கொடுத்துட்டு பணத்தை வாங்கிக்கன்னு சொல்றீங்களா?'' - சங்கீதா மாமியார் பக்கம் திரும்பினாள்.

''நான் அப்படி சொல்லலை. அதுவும் ஒரு வழின்னு சொல்றேன்.''

''அதெல்லாம் முடியாது. உங்க பெண்களுக்காக நாங்க நடுத்தெருவுலயா நிப்போம்?''

''வார்த்தையை அளந்து பேசு. நான் யாரையும் நடுத்தெருவுல நிறுத்தச் சொல்லல...''

''அப்ப இப்படி பேசினா என்ன அர்த்தம்?''

- மாமியார் மருமகள் சண்டை சூடு பிடிக்கத் தொடங்க சரவணனுக்கும் தலையை வலித்தது.

''கொஞ்சம் சும்மா இருக்கீங்களா?'' - அலறினான். அவர்களும் பேச்சை நிறுத்தினர். தங்கைகள் லதா, சுதா கண்களிலும் கண்ணீர்ப் பசை.

சரவணன் தலையை உதறிக் கொண்டான்.

''இருக்கற பிரச்சினை போதாதா... நீங்க வேற அடிச்சுக்கணுமா?''

''பின்ன என்னங்க... வேலையை விட்டுட்டு தங்கைகளுக்கு கல்யாணம் பண்ணிட்டா நாம என்ன பண்றது - அதைப் பத்தி யோசிச்சாங்களா உங்கம்மா?''

''ஏன் வேற வேலையே கிடைக்காதா...? எல்லாரும் சேர்ந்து ஒரு இட்லிக்கடை போடுவோம். நீ மாவு ஆட்டு, நான் அவிக்கறேன். இவன் கடை நடத்தட்டும். பிழைக்க வழியா இல்லை?''

- ஞானம் ஒரு முடிவுக்கு வந்த மாதிரி அலறினாள்.

''பிரமாதம்... அந்த இட்லிக் கடையை இப்பவே நீங்க போட்டு உங்க பொண்ணுகளுக்கு கல்யாணம் பண்ணுங்க. எங்களை விட்றுங்க.''

- சங்கீதாவும் சளைக்காமல் பதில் சொன்னாள். சரவணனுக்குள் திரும்பவும் சஞ்சலம் அலை போட்டது.

''வாயமூடுங்க... முதல்ல வேற வீட்டுக்கு குடிபோறதபத்தி சிந்திப்போம். அப்புறம் வேலையை விட்றது, இட்லிக்கடை வைக்கறத பத்தி பேசலாம்.''

- என்றவன் அப்பொழுதே வெளியேறத் தொடங்கி விட்டான்.



''டேய் எங்கடா கிளம்பிட்டே.... இப்படிப் போனா எப்படி... அந்த புரோக்கர் வந்தா என்ன சொல்ல?''

''முதல்ல ஒரு நல்ல வீடு பாத்துக் கொடுக்கச் சொல்லு. அப்புறம் கல்யாணம் பத்தி பேசலாம்.''

''அவனுக்கு அதுதான் தொழில். சொன்னா உடனே வீடு இருக்கற இடத்தை சொல்லிடுவான். ஆனா அட்வான்ஸ்ன்னு ஒண்ணு தரணுமே. அதுக்கு என்ன பண்ணப்போறே?''

''என் பொண்டாட்டி கழுத்துலதான் ஒரு அஞ்சுபவுன் சங்கிலி தொங்கிக்கிட்டிருக்கே. வேற வழி?''

- அவன் சொல்ல சங்கீதா புடவைத் தலைப்பால் சங்கலியை இழுத்து மூடினாள்.

''நீ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வேற வழியே கிடையாது சங்கீதா. இந்த சென்னைல பத்துமாச அட்வான்ஸ்ங்கறதுதான் நடைமுறை. மினிமம் பதினஞ்சா யிரம் வேணும். நமக்கு வேற வழி எங்க இருக்கு சொல்லு பார்ப்போம்...''

- கேட்டுவிட்டு வெளியேறி விட்டான். சங்கீதா கலங்கிப் போய் மாமியாரை வெறித்தாள். அவளோ காணாமல் போய்விட்ட அவள் கணவனும் சரவணனின் அப்பாவுமான கைலாசநாதன் படத்தின் அருகே சென்று சினிமா அம்மாக்கள் மாதிரி அழ ஆரம்பித்தாள்.

''நீங்கபாட்டும் எனக்கென்னன்னு போய்ட்டீங்க. இங்க பாத்தீங்களா எங்க நிலையை...?''

''ஆமா... அவர் பெரிய கடவுள். அவர் காதுல உங்க புலம்பல் உடனே விழுந்து ஒரு பத்து லட்சரூபா பணத்தோட உங்களை வந்து உடனே பாக்கப் போறாரு.'' - என்று

பக்கத்தில் நின்று ஒரு இடி இடித்துவிட்டு சங்கீதா விலகிக் கொண்டாள்.

ஞானத்தால் பேச முடியவில்லை. அவளையும் அழுகை ஆக்ரமித்தது.

'நீங்கமட்டும் கூட இருந்தா பத்து லட்சமெல்லாம் நமக்கு ஒரு விஷயமா?'

- அவளுக்குள் ஒரு கேள்வி எழும்பியது. ஆனால் பலமாய் கேட்கத்தான் திராணி இல்லாமல் போய்விட்டது.

## 4

'சில நேரங்களில் வாழ்க்கை எல்லோரிடமும் கண்ணாமூச்சி விளையாடும். அது வேடிக்கையாகவும், விநோதமாகவும், புரிந்து கொள்ள முடியாதபடியும் இருக்கும்.'

பத்துலட்சம்!

அவ்வளவும் பச்சை நோட்டுக்கள். அந்த சேட் மிக மரியாதையாக அதை அந்த பெரியவரிடம் தந்து விட்டு காலிலும் விழுந்தார்.

''எழுந்திரு சேட்... எதுக்கு கால்ல உழுறே?'' - இது அந்த பெரியவர்.

சேட்டும் எழுந்திருந்தார்.

''சாமி... நீங்கதான் எனக்கு அந்த ராஜேஸ்வரி. நீங்கதான் எனக்கு அந்த ஆதிபராசக்தி. உங்க கால்ல விழாம நான் யார் கால்ல விழுவேன்?''



''போதும்... பெரிய வார்த்தை எல்லாம் பேசாதே. ஆமா எனக்கு எதுக்கு இவ்வளவு பணம்தர்றே?''

''என் காணிக்கை சாமி. யாராலும் தீக்க முடியாத வியாதியை தீத்துவெச்சு என் சம்சாரத்துக்கு உயிர் கொடுத்திருக்கீங்களே...''

''நான் எங்க தீர்த்து வைச்சேன்? எல்லாம் அந்த அம்பாள் கிருபை.''

''அவதான் உங்க ரூபத்துல வந்து என் குறையை தீர்த்து வெச்சுருக்கா. நீங்க இல்லேன்னா இன்னிக்கு அவ இல்லை. எனக்கும் வாழ்க்கை இல்லை.''

''அப்படியெல்லாம் சொல்லாதே, எல்லாம் விதிப்படி நடந்திருக்கு. நான் உனக்கு உதவணும்கறது விதி. அவ்வளவு தான். இந்த பணத்தை நீ எதாவது நல்ல காரியத்துக்கு கொடுத்துடு.''

''அதை நீங்களே செய்திடுங்க. இது இனிமே உங்க பணம்.''

''அப்படியா... அப்ப இதை நான் எதாவது அநாதை ஆஸ்ரமத்துக்கு தந்துடட்டுமா?''

''தாராளமா...''

''அப்ப நான் புறப்பட்றேன். நல்லா இரு.''

- அவர் கிளம்பினார். வாசல் வரை வந்து வழி யனுப்பினார் சேட்டு. கூடவே அவர் மனைவியும் வந்தாள்.

மார்பகத்தில் கேன்சர் என்று பரிசோதித்ததில் தெரிந்தது. ஆறுமாசம் உயிரோடு இருந்தால் பெரிய விஷயம் என்று கூறிவிட்டார்கள் டாக்டர்கள். அம்ருதாவும் துரும்பு போலாகி விட்டாள். அதுதான் அவள் பெயர்.

'அப்போதுதான் யாரோ சொல்லி சக்தி பெருமாளின் அறிமுகம் சேட்டுக்கு கிடைத்தது.

சக்தி பெருமாள்தான் அந்த பெரியவர். அம்மன் உபாசகர். தினம் தினம் வீட்டுக்கு வந்து அவள் எதிரில் அமர்ந்து ஜபம் செய்தே அவள் வியாதியை கரைத்து விட்டார். டாக்டர்களும் திரும்ப பரிசோதித்து பார்த்த போது கான்சர்கட்டி இருந்த தடயமே இல்லை.

எப்படி இது சாத்யம் என்பது இந்த நொடி புதிராகத்தான் உள்ளது. சேட்டும் பிரமிப்பின் உச்சிக்கே போய்விட்டார்.

சக்திபெருமாள் என்னும் அந்த உபாசகரிடம்கூட சிலிர்ப்போடு கேட்டார். அவரிடம் ஒரு சின்ன புன்னகைதான் பதில். மிகவும் வற்புறுத்திக் கேட்டதில் 'எல்லாம் அம்பிகையின் அருள். அவள் கருணை' என்று சிம்பிளாக முடித்துவிட்டார். எதுவானால் என்ன? சேட் வரையில் நடந்தது ஒரு உலக அதிசயம். அதற்கு பத்து லட்சம் என்பது ஒரு அல்ப சன்மானம்தான்!

**எ**லெக்ட்ரிக் ட்ரெயினில் அவ்வளவாக கூட்ட மில்லை. பெரியவர் சக்திபெருமாள் அதில் ஏறி ஒரு ஓரமாக அமர்ந்து கொண்டார். மடிமேல் அந்தப் பெட்டி, உள்ளே சுளையாக பத்துலட்சம்.

அதே பெட்டியில்தான் சரவணனும் ஏறினான். அவர் அருகில் இடம் காலியாக இருந்தது. போய் உட்கார்ந்து கொண்டான்.

குரோம்பேட்டையில் ஒரு வீடு காலியாக இருப்பதாக சொன்னார்கள். பார்க்கத்தான் போய்க் கொண்டிருக்கிறான். ட்ரெயினும் மின்சாரத்தை உறிஞ்சி சக்தியை பெற்ற



நிலையில் வேகமெடுக்க ஆரம்பித்துவிட்டது. ஜன்னல் வழியாக காற்று வந்து அப்பியது. அதில் கூடவே ஒருவித ஜவ்வாது வாசம். பெரியவரிடம் இருந்துதான் வந்தது. அவரோ கண்களை மூடி தியானத்தில் இருக்கிற மாதிரி இருந்தார். அவனுக்கும் அவர் தோற்றம், அந்த வாசனை, நாரைச்சிறகு போன்ற தலை முடியும் தாடியும் ஆச்சரியத்தை தந்தபடி இருந்தது.

பகலில் வேலை பார்த்த களைப்பு, வீட்டில் ஏற்பட்ட ரகளை எல்லாமாக அந்த பயணத்தின் போது மனதை அமிழ்த்த வீசும் காற்று தூக்கத்தை பிடித்து கண்களில் செருகியது.

அப்படியே கண்ணயர்ந்து விட்டான்.

கண்ணைத் திறந்தபோது ட்ரெயின் குரோம்பேட்டை ஸ்டேஷனுக்குள் நுழைந்து கொண்டிருந்தது. பெட்டியிலும் ஒருவரும் இல்லை.

'நல்லவேளை... கண் திறந்ததால் பிழைத்தேன். இல்லாவிட்டால் போய்க் கொண்டே இருந்திருப்பேன்' என்று நினைத்தவன் பார்வையில் பெரியவர் அமர்ந்திருந்த இடத்தில் பெட்டி மட்டும் இருந்தது கண்ணில் பட்டது.

'என்ன இது... பெரியவர் பெட்டியை மறந்து விட்டுவிட்டு போய்விட்டாரா?' - அதைக் கையில் எடுத்தபடி சுற்றிச் சுற்றிப் பார்த்தான்.

ஒருவரும் இல்லை. வண்டியை விட்டு இறங்கினான். ஸ்டேஷனிலும் ஆளரவமில்லை. சட்டென்று கடற்கரை கைரேகை ஜோசியன் சொன்னது ஞாபகமாய் ஞாபகத்துக்குள் வந்தது.

'பெரிய ஆளாகப் போறீங்க. லட்ச லட்சமா சம்பாதிக்கப் போறீங்க...'

- அவன் சொன்ன லட்சம் இதில் இருக்கிறதா? கேள்வி பிறாய்ந்தது. விரல்கள் திறந்து பார்க்க முனைந்தன. பெட்டியும் பிரச்சினை பண்ணாமல் திறந்து கொண்டது. உள்ளே பத்து லட்ச ரூபாய்க்கான பச்சை நோட்டுக்கள்.

சரவணனுக்கு நின்ற இடம் நடுங்குவது போல இருந்தது. இது அதிர்ஷ்டமா? இல்லை சோதனையா?

சூட்கேஸோடு வீட்டுக்குள் நுழையவும் வீடே சுற்றி வளைத்துக் கொண்டது.

''என்னடா இது பெட்டி...?'' - ஞானம் மோவாயில் விரல் பதித்தபடி கேட்டாள்.

''ரயில்ல ஒருத்தர் தவறவிட்டுட்டார்மா. உள்ற கட்டுக்கட்டா பணம் இருக்கு.'' - என்றபடியே அதைத் திறந்தான். நோட்டுக்கள் மின்னி அனைவரின் கண்களையும் பறித்தன. சங்கீதா 'வாவ்!' என்று வாயைப் பிளந்து கொண்டு மூடக்கூட முடியாமல் திணறினாள்.

லதாவும் சுதாவும் சிறகை விரித்தபடி இரையைப் பார்த்துவிட்டு வந்தமரும் கொக்கைப் போல சுற்றி வந்து நின்றார்கள்.

''இப்ப என்னடா பண்ணப் போறே?'' - ஞானம் கேட்டாள்.

''என்ன செய்யறதுன்னே தெரியலம்மா...'' - சரவணன் பரிதாபமாகச் சொன்னான்.

''டேய்! நீ ஒரு நாணயஸ்தரோட பிள்ளடா. இதுல தெரியறதுக்கு என்ன இருக்கு? பேசாம போலீஸ்ல கொண்டு போய் கொடு.'' - ஞானம் சரியான பாதையைத்தான் காட்டினாள். 'நான் ஒரு சராசரிப் பெண்ணில்லை' என்கிற மாதிரி அவனையும் பார்த்தாள்.



ஆனாலும் சரவணன் தயங்கினான்.

''என்ன தயக்கம்?''

''போலீஸ்ல கொடுத்தா அந்த வயசான பெரியவர் கிட்ட இது போய் சேருமான்னு சந்கேமா இருக்கும்மா.''

''போலீஸ் மேலே சந்தேகமா...?''

''ஆமாம்மா... போலீஸ், கோர்ட், ஜெயில்னு எது மேலையும் எனக்கு நம்பிக்கை கிடையாது இப்ப. ரமான்னு ஒரு பெண்ணை என்ன பாடுபடுத்திட்டாங்க தெரியுமா இவங்கல்லாம்...''

''நாத்துல ஒண்ணு பழுதுன்னா எல்லாத்தையுமா அப்படி நினைக்கறே...?''

''என்ன பண்ணச் சொல்றே? தெரியாம ஒன்வேல வந்துட்டேன். போலீஸ்காரரும் பிடிச்சுட்டார். அவர் என்ன பண்ணணும்? ஃபைன்தானே போடணும்?''

அவன் கேட்க - எல்லோரும் வெறிக்க - அவனிடம் விளக்கத்தின் தொடர்ச்சி.

''அம்பது ரூபாய் கொடுத்துட்டு போய்க்கிட்டே இருன்னு சொல்றார் போலீஸ்காரர். கோர்ட்டுக்கு போனா ஐந்நூறு ரூபாய் கட்ட வேண்டியிருக்கும். எது வசதின்னு கேக்கறாரு.''

''சரி இப்ப என்ன பண்ணப் போறே?''

''அந்தப் பெரியவர் முகம் நல்லா ஞாபகம் இருக்கும்மா. தேடிப்பாத்து கொடுக்கணும்.''

''இந்த பெட்டில அட்ரஸ் இல்லையா?''

''தேடிப்பாக்கறேன்...'' - சரவணன் அட்ரஸை தேட ஆரம்பித்தான்.

''என்னங்க நீங்க... அம்மாதான் புரியாம பேசறாங்கனா நீங்களும் அட்ரஸை தேட நீங்களே...'' சங்கீதா பேச்சு அவனை கேலி செய்கிற மாதிரி இருந்தது.

''என்ன சங்கி சொல்றே நீ...?''

''இது நமக்குக் கடவுளா பார்த்து கொடுத்திருக்கற பரிசுங்க.'' - அவளிடம் புதிய கோணம்.

''பரிசா?''

''ஆமாம். நம்ம கஷ்டம் தெரிஞ்சு கடவுளா கொடுத்திருக்கற பரிசுங்க இது. நம்ம தேவைகளை யோசிச்சுப் பாருங்க.'' - சங்கீதா சொல்வதுதான் சரி என்கிற மாதிரி லதாவும் சுதாவும்கூட அவனைப் பார்த்தனர்.

''வாய மூடு... பரிசாம் பரிசு. யார் வீட்டுக் காசோ? தொலைச்சவர் இப்ப என்ன பாடுபட்டுகிட்டு இருக்காரோ...?'' - மீண்டும் ஞானத்திடம் வெடிப்பு.

''பத்துலட்சத்தை ஒரு மனுஷன் ஒட்ற ரயில்ல விட்டுட்டு போறான்னா அவன் எவ்வளவு பொறுப்பில்லாதவனா இருக்கணும்?''

''அதைப்பத்தி நமக்கென்ன வந்தது. இது நேர்வழியில வரலை. திருப்பிக் கொடுத்துட்றதுதான் நல்லது.''

''பெரிய நேர்வழி. இந்தக் காலத்துல யார் நேரா நடக்கறாங்க? நேரா நடந்தா போய் முட்டிக்க வேண்டியது தான். வளைஞ்சு நெளிஞ்சு போகத் தெரியணும் நமக்கு.''

-மீண்டும் மாமியார் மருமகள் சண்டை ஆரம்பமாகியது.

''இரண்டு பேரும் கொஞ்சம் சும்மா இருக்கீங்களா?''



-இடையில் புகுந்து அலறினான் சரவணன். தற்காலிகமாக பணத்தோடு சூட்கேஸை பீரோவில் வைத்துப் பூட்டினான்.

''எனக்கு என்ன பண்றதுன்னு தெரியும். பேசாம இருங்க.'' - என்றபடி கட்டியிருக்கும் லுங்கியோடு தெருவில் இறங்கினான்.

வீதிமுக்கில் நாடார் டீக்கடை இருக்கிறது. மாலை முரசு, தினத்தந்தி என்று பேப்பர்கள் விரிந்து கிடக்கும். போனால் படித்துவிட்டு ஒரு டீயும் குடித்துவிட்டு வரலாம்.

தெருவைச் சேர்ந்தவர்களும் வருவார்கள்.

கொஞ்சம் நாட்டு நடப்பும் பேசிவிட்டு வரலாம்.

சரவணனும் நாடார் கடையை நோக்கித்தான் நடந்தான்.

வீட்டில் ஞானம் பிரமை பிடித்த மாதிரி ஆகிவிட்டிருந்தாள். மீண்டும் கணவர் கைலாசநாதன் படம் முன்னால் போய் நின்றாள்.

''என்னங்க இது சோதனை...?'' - என்று படத்தைப் பார்த்து கேட்டாள். சங்கீதாவுக்கு எரிச்சலாக வந்தது.

''ஆ ஊன்னா புருஷன் படத்துகிட்ட போய் நின்னு புலம்ப ஆரம்பிச்சுடுங்க. அவர் உயிரோட இருக்காரோ இல்லை போய்ச் சேர்ந்துட்டாரோ...?''

- அவள் பேச்சில் ஆத்திரமும் ஆவேசமும் தொனித்தது. ஞானத்துக்கு அழுகையே வந்தது.

''போய் வாயைக் கழுவுடி... என் புருஷன் பத்தி எனக்குத் தெரியும். அவர் நூறு வருஷம் இருக்கப் போறவர். வாய் புளிச்சிச்சோ, இல்ல மாங்கா புளிச்சிச்சோன்னு பேசாதே.''

- வெடித்தாள். லதாவும் சுதாவும் வந்து இரண்டு பக்கமும் நின்று கட்டிக் கொண்டனர்.

''அப்படின்னா திரும்பி வரலாமே... அவ்வளவு ஏன் ஒரு போஸ்ட் கார்ட் போடலாமே? வருஷம் அஞ்சாச்சு. என் புருஷன்தானே தூணா இருந்து குடும்பத்தை சுமக்கறார்?''

- சங்கீதாவிடம் தொடர்ச்சியாக சூடான கேள்விகள். ஞானத்துக்கு அழுவதைத்தவிர வேறு வழி தெரியவில்லை.

கணவன் நினைப்புக்குள் நுழைகிறாள்.

ஒரு தனியார் கம்பெனியில் அதன் எம்.டி.க்கு பி.ஏ வாக இருந்தவர் கைலாசநாதன். தமிழ், ஆங்கிலம், ஹிந்தி என்று எல்லா பாஷையும் அத்துபடி. எம்.டி.க்கு கைலாச நாதன் இல்லை என்றால் கையும் ஓடாது. காலும் ஓடாது. அப்படி ஒரு பற்றுதல் கைலாச நாதன் மேல். கை நிறைய சம்பளம் கொடுத்து நன்றாகவே வைத்திருந்தார்.

அதற்காக கைலாச நாதன் தாம் தூம் என்று செலவு செய்து ஒரு படாடோபமான வாழ்க்கை வாழத் தயாரில்லை. அடக்கமான அமரிக்கையான வாழ்க்கைதான் அவருக்குப் பிடித்திருந்தது.

எம்.டி. அவருக்காக ஒரு பங்களாவை ஒதுக்கியபோது வேண்டாம் என்று மறுத்துவிட்டு எளிமையாக வாடகை வீட்டிலேயே இருந்துவிட்டார். கார் கொடுத்த போது அதைக் கூட மறுத்துவிட்டார்.

'இன்று நான் சர்வீசில் இருக்கிறேன். நீங்கள் நல்ல சம்பளம் தருகிறீர்கள். இந்த வசதிகள் தாங்கும். நாளையே நான் ரிட்டையர் ஆனால் இதை பராமரிக்க என்னால் முடியுமா என்று பார்க்க வேண்டும். பராமரித்துத்தான் ஆக வேண்டும் என்றால் அதற்காக புத்தி இப்பொழுதே நாலு காசை சேர்த்து வைத்துக் கொள்ளச் சொல்லும்.



எதிர்காலத்தில் நிம்மதியாக இருக்க புண்ணியத்தைச் சேர்ப்பதுதான் புத்திசாலிதனம். அதுதான் ஆபத்தில்லாதது. ஆனால் பணம் சேர்த்துக் கொள்வது ஆபத்தானது. அது உறவுகள் இடையே ஆசையை வளர்த்துவிடும். அப்பா சொத்து இருக்கிறதே என்று பிள்ளைகளிடம் உழைப்பையும் மட்டுப்படுத்திவிடும்.

எப்படிப் பார்த்தாலும் பணம் சேர்ப்பது எனக்கு சரியாகப்படவில்லை. அதற்காக இப்பொழுதே பாவம் செய்யவும் நான் தயாராக இல்லை. எளிமைதான் என்றைக்கும் சிறப்பானது' என்கிற ஒரு வியாக்யானத்துடன் அந்த வசதிகளை மறுத்துவிட்டார். இப்படிப்பட்டவர் மேலும் ஒரு பெரும்பழி வந்து விழுந்தது. சம்பளப் பணத்துடன் இவர் பேங்கில் இருந்து திரும்பும் போது ஒரு திருட்டுக் கூட்டம் திட்டமிட்டு பணத்தைப் பிடுங்கிக் கொண்டு இவரையும் தலையில் அடித்துப் போட்டுவிட்டு போயே போய்விட்டது.

அதன்பின் கைலாச நாதனுக்கு உடம்பில் உயிர்தான் இருந்தது. ஆனால் தான் யார் என்றுகூடத் தெரியாத அளவு சித்தம் கலங்கிவிட்டது.

அதன்பின் பார்க்காத வைத்தியம் இல்லை. போகாத கோவில் இல்லை. இறுதியாக காசிக்கு யாத்திரையாக அவரை அழைத்துச் சென்றாள் ஞானம். ஆனால் விதி வேறு விதமாய் விளையாடிவிட்டது. நடுவழியில் ஞானம் தூங்கிக் கொண்டிருக்கும்போது எங்கோ இறங்கிப் போய்விட்டார். இன்றுவரை அவர் உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்பதுகூடத் தெரியாது.

சகலத்தையும் எண்ணிப் பார்க்கிறாள் ஞானம். தர்மம் காப்பாற்றும், தர்மம் காப்பாற்றும் என்று சொல்லிக் கொண்டிருந்தவர். அது எப்படியோ இன்றுவரை காப்பாற்றிக் கொண்டுதான் இருக்கிறது.

எப்பொழுது செய்த பாவமோ கைலாசநாதனை குடும்பத்தில் இருந்து பிரித்துவிட்டது. மேலும் பாவத்தைச் செய்தால் அது அவரை தன் குடும்பத்துடன் சேரவிடாமலே செய்துவிடுமோ என்பதுதான் ஞானத்தின் கவலை.

மருமகளோ குறுக்கு வழிதான் பிழைக்கும் வழி என்று நினைக்கிறாள். ரயிலில் கிடைத்த பெட்டி தேடி வந்த லட்சுமியாம். இந்த லட்சுமிக்கு ஒரு ஏழைக் குடும்பத்தை நோக்கிவர நேர்வழியே தெரியாதா என்ன?

ஞானத்திடம் அங்கலாய்ப்பு பெருக ஆரம்பித்தது.

## 5

'காலத்தை நதி என்றும், அதில் விழுந்த துரும்புகள்தான் நாம் என்றும் சொல்வார்கள். துரும்புகளால் எதிர்நீச்சல் போட முடியாது!'

நாடார் டீக்கடை!

டீயைச் சூப்பும்போது பலவிதமான பேச்சுக்கள் காதில் விழுந்தன. 'விலைவாசி உயர்வு' அதில் பிரதான இடத்தில் இருந்தது. நாடார்கூட தனது டீயை இரண்டு ரூபாயில் இருந்து இரண்டரை ரூபாய்க்கு உயர்த்தியிருந்தார். அதுவேகூட கட்டுப்படி ஆகாதாம்.



''போதும் போதும்... பால்ல தண்ணி, டீத்தூள்ல கலப்படம்ன்னு நீங்க அட்ஜஸ் பண்றது எங்களுக்குத் தெரியாதாக்கும்...''

''என்னாது... என்கிட்ட கலப்படமா...? நீ நிரூபிச்சிட்டா இந்தக் கடையை உனக்கே எழுதிக் கொடுத்துட்டு போயிட்றேன்.''

- நாடாரும், ஒரு கஸ்டமரும் ஜாலியாக மோதிக் கொள்ள குறுக்கில் ஒரு தகரக் குவளையுடன் கண் தெரியாத ஒரு குருடர்.

''ஐயாசாமி... எதுனா பிச்சை போடுங்கய்யா'' - என்கிற கழிவிரக்கமான குரலில்...

சரவணனை அந்தக் குரலும் அவர் நிலையும் பிடித்து உலுக்கு உலுக்கியது.

கிட்டத்தட்ட அவர் அவன் அப்பாவைப்போல தோற்றத்தில் இருந்தார். அவனுக்குள் பாசம் பீறிட ஆரம்பித்தது. சட்டைப் பாக்கெட்டில் துழாவி ஒரு ஐந்து ரூபாய் நாணயத்தை எடுத்து அந்த தகரக் குவளையில் போட்டான்.

''என்ன சரவணா... காசு நிறைய இருக்குதா? அஞ்சு ரூவாயா போட்டே?'' - இது ஒருவர்.

''என்னமோ தோணிச்சு. போட்டேன். இன்னிக்கு அஞ்சு ரூவாயெல்லாம் ஒரு விஷயமா என்ன...?''

''அப்ப நீ ஒரு லட்சாதிபதின்னு சொல்லு.''

''என்னப்பா சொல்றே?''

''லட்சாதிபதிக்குதான்பா அஞ்சு ரூவா பிசாத்துக்காசு. மாசச் சம்பளக்காரனுக்கு அப்படிக் கிடையாது. ஏன்னா

விலைவாசிதான் ஏறுதே ஒழிய சம்பளம் அதுக்குத் தகுந்த மாதிரி எங்க ஏறுது?''

- நியாயமான ஒரு கேள்வியாகத்தான் சரவணனுக்கு தோன்றியது. சிரித்தான்.

அவன் லட்சாதிபதி என்று சொன்னது கொஞ்சம் ரத்தத்தில் கலந்து தித்தித்தது.

அந்த குருட்டுப் பிச்சைக்காரன் அடுத்த கடையை பார்க்க நகர்ந்து விட்டான்.

மனதோ பத்து லட்சத்தை என்ன செய்வது என்பதில் ஒரு பட்டிமன்றம் நடத்த ஆரம்பித்தது.

ஒரு டீக்கடையில்கூட நடுத்தட்டுக்காரனுக்கு பெரிய மரியாதை இல்லை. அஞ்சு ரூபாயை எல்லாம் பெரிதாகக் கருத வேண்டிய கட்டாயம். ஆபீசிலும் வீட்டுக்கு போகச் சொல்லி துரத்தும் கொடுமை...

'இப்படி ஒரு நிலையில் நான் மட்டும் நியாயமாக இருந்து எதை சாதிக்கப் போகிறேன்?'

கேள்வி மரங்கொத்தியாக கொத்தியது.

'சந்தர்ப்பங்களை பயன்படுத்திக் கொள்ளத் தெரிய வேண்டும்!' - எதிலோ படித்த பழமொழி ஞாபகத்தில் வந்தது.

'காட்டில் புலி, மானை அடித்துச் சாப்பிடுகிறதே அது தப்பா? அது பாவமா?' - இப்படி ஒரு கேள்வியில் எப்பொழுதோ நடந்த பட்டி மன்றங்கள் ஞாபகத்தில் வந்தன.

காடுகளில் சிங்கம்தான் வாழ முடியும். மான், சிங்கம் வாழ அழிந்துதான் தீரவேண்டும். நீ யார்? மானா? சிங்கமா?



சிங்கமாய் இருந்தால்தான் வாழ்க்கை.

இல்லாவிட்டால் மரணம்தான் பரிசு. எங்கும் எப்பொழுதும் வலிமையானதே வாழ முடியும்.

அப்படி இருக்க வந்த வலிமையை தர்ம நியாயம் பேசி இழந்துவிடுவதா?

அவன் யோசித்துக் கொண்டே இருந்தான். ஒரு ஆச்சரியம்! அவனை, பெட்டியை அவன் வசம் தொலைத்து விட்ட அந்தப் பெரியவரான சக்தி பெருமாள் ஒரு மறைவில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

எதற்காக?

அவன் வீட்டுக்குத் திரும்பியபோது ஞானத்தை பார்க்க முடியவில்லை. எங்கே போய்விட்டாள்? தேடினான்.

''அம்மா அந்த பெட்டியோட எங்கேயோ வெளியே போனாங்க...'' - லதாவும், சுதாவும் அதிர்ச்சியைத் தந்தனர்.

''வெளியே போனாங்களா... எங்க?''

''அநேகமா போலீஸ் ஸ்டேஷனுக்காதான் இருக்கணும்.'' அவர்கள் பதிலில் அவனுக்கு குப்பென்று வியர்த்துவிட்டது.

சங்கீதா ஓடிவந்து குய்யோ முறையோ என்று கத்தத் தொடங்கினாள்.

''இதுக்குத்தான் உங்கம்மா என்னைக் 'காய்கறி வாங்கிட்டு வா'ன்னு கடைக்கு அனுப்பினாங்களா?'' - என்று ஒப்பாரியே வைக்கத் தொடங்கினாள். சரவணனுக்கு அதற்குமேல் அங்கு இருக்கப் பிரியமில்லை. அவனும் போலீஸ் ஸ்டேஷனுக்கு கிளம்பினான்.

ஸ்டேஷனில்...

பெட்டியையும் பணத்தையும் பார்த்துவிட்டு ஒரு சந்தேகப் பார்வையோடுதான் சப்-இன்ஸ்பெக்டர் பேசிக் கொண்டிருந்தார்.

''பத்து லட்ச ரூபா பணத்தை ஒரு பெரியவர் ரெயில்ல தவறவிட்டார்னா நம்ப முடியலையே! ஆமா எந்த இடத்துல தவறவிட்டார்...?''

''எலெக்ட்ரிக் ட்ரெயின்லங்க. என் மகன்தான் இதை எடுத்துக்கிட்டு வீட்டுக்கு வந்தான்.''

''அவர் ஏன் நேரா போலீஸ் ஸ்டேஷனுக்கு வரலை.''

- எஸ்.ஐ.யின் கேள்வி ஞானத்தை குத்தியது.

''அவனுக்கு இந்த பெட்டியைத் திறந்து பார்த்த உடனேயே கையும் ஓடலை, காலும் ஓடலை.''

''ஆனா உங்க வீட்டுக்கு மட்டும் ஓடி வர முடிஞ்சிச்சாமா?''

''என்னங்க கேள்வி இது. வீட்டுக்கு வராம வேற எங்க போவான்?''

''நேரா இங்க வந்திருக்கணும்.''

''தப்புதாங்க.''

''தப்புதான்னா...? நீங்க மட்டும் எதனால ஸ்டேஷனுக்கு கொண்டுகிட்டு வந்தீங்க?''

''இங்க உங்ககிட்ட ஒப்படைச்சாதானேங்க பணம் உரியவர்கிட்ட போய்ச் சேரும்.''

''ஓஹோ... இந்த புத்தி உங்க பையனுக்கு இல்லையேன்னு நினைக்கும் போதுதான் ரொம்ப வருத்தமா இருக்கு.''



''சிறு பையன்க. குழம்பிட்டான். அதான் நான் கொண்டு வந்துட்டேனே...?''

''சரி சரி... உங்க வீட்டு விலாசம், போன் நம்பர்லாம் கொடுத்துட்டு புறப்படுங்க. நாங்க பாத்துக்கறோம்.''

''பாத்துக்கறோம்னா...?''

''பாத்துக்கறோம்னா உரியவங்ககிட்ட ஒப்படைக்கப் போறோம்னு அர்த்தம். ரொம்ப நோண்டி நொங்கு எடுக்கக்கூடாது.''

''நல்லதுங்க. நான் கிளம்பறேன்.'' - ஞானம் கிளம்பத் தொடங்கி வாசலைத் தாண்டும்போது எதிரில் சரவணன்!

''என்னம்மா... எங்க பொட்டி?''

''சப்-இன்ஸ்பெக்டர்கிட்ட ஒப்படைச்சுட்டேன்.''

''சரி எங்க அதுக்கு எவிடென்ஸ்?''

''அப்படின்னா?''

''எப்.ஐ.ஆர். மாதிரி, நீங்க பணத்தை ஒப்படைச்சதுக்கு உங்களுக்கு ஒரு ரசீது கொடுப்பாங்க. அது எங்கே?''

''அதெல்லாம் எதையும் தரலியே...''

''இதுக்குத்தான் நான் அப்பவே சொன்னேன். போலீஸ்காரங்களை நம்பாதீங்கமான்னு. கேட்டா தானே? இப்ப என்ன குடி முழுகிப் போச்சுன்னு பணத்தை தூக்கிக்கிட்டு இங்க வந்துட்டீங்க...?''

- ஸ்டேஷன் வாசலிலே சரவணன் கத்த ஆரம்பிக்க, சக போலீஸ்காரர்களும் வேடிக்கை பார்க்க, எஸ்.ஐ.யும் வாசலுக்கே வந்துவிட்டார்.

''என்னய்யா இங்க சத்தம்?''

''சத்தம் இல்லை... பெட்டியை ஒப்படைச்சதுக்கு ரசீது எதுவும் கிடையாதா? அதத்தான் கேட்டுகிட்டிருக்கேன்.''

- சரவணன் கேள்வியே அவன் விவரமானவன் என்று சொல்லாமல் சொல்லிவிட்டது. எஸ்.ஐ.யும் அவனை ஏற இறங்கப் பார்த்தார்.

''உள்ற வா...'' - என்று அழைத்தபடி திரும்பி நடந்தார்.

''நீங்க பப்ளிக்கை வா போ நீன்னுதான் கூப்பிடுவீங்களா?'' - சரவணனும் கேட்டபடி பின் தொடர்ந்தான். இது அவன் சுயமரியாதையும் உடையவன் என்று சொல்லாமல் சொல்லிவிட்டது. எஸ்.ஐ. முகத்தில் கோபம் குவிய ஆரம்பித்தது.

தனது நாற்காலியில் உட்கார்ந்தபடியே அவனை மேலும் கீழுமாய் பார்த்தார்.

''என்ன சார் என் கேள்விக்கு பதிலே சொல்ல மாட்டீங்களா?''

''என்ன பதில் சொல்லணும்?''

''எங்கம்மா பணத்தை ஒப்படைச்சிருக்காங்க. அதுக்கு ஒரு ரசீது கிடையாதா?''

''ரசீது கிடக்கட்டும். அந்தப் பணம் யார் கைல கிடைச்சது?

''என் கைலதான்...''

''நீ வராம எதுக்காக உங்கம்மா கிட்ட கொடுத்து விட்டே...?''

''முதல்ல கொஞ்சம் மரியாதையா பேசுங்க. நான் புறப்பட்றதுக்குள்ள எங்கம்மா கிளம்பிட்டாங்க. இப்ப யார் வந்து தந்தா என்ன...? ஒருத்தர் பணத்தை தொலைச்



சிருக்காரு. எங்கம்மா கொண்டுகிட்டு வந்து தந்திருக்காங்க. அதைப் பாராட்டாம, ரசீது தராம இப்படி மரியாதை இல்லாம பேசினா என்ன சார் அர்த்தம்?''

''நீ ரொம்ப அதிகம் பேசறே... இது யாரோ தொலைச்ச பணமா... இல்லை நீ யார்கிட்டையாவது திருடின பணமா?''

''என்ன சார் இது புது கதை?''

''கதை இல்லை... உங்கம்மா பணத்தோட வந்திருக்கறத பார்த்தா எனக்கு சந்தேகமா இருக்கு!''

''திருடியிருந்தா நான் தைரியமா இந்த ஸ்டேஷனுக்கு வருவேனா?''

''நேர வந்துட்டதாலேயே நீ நல்லவன்னு நம்ப நான் ஒண்ணும் இளிச்ச வாயனில்ல.''

- எஸ்.ஐ.யிடம் எகத்தாளம் கொடிகட்டிப் பறந்தது. ஞானம் அதிர்ச்சியடைந்தாள்.

''சார்... என் மகன் திருடன் கிடையாது சார். நான் கொண்டு வந்து தந்தது தப்புன்னா என்னை மன்னிச்சிடுங்க. அவனை எதுவும் சொல்லாதீங்க'' என்று பதற்றத்தோடு சொன்னாள்.

நடுவில் செல்போன் ஒன்று எஸ்.ஐ.யின் பாக்கெட்டில் அமட்டியது. அதற்கு காதைக் கொடுத்தபடி எஸ்.ஐ. சற்று விலகிச் செல்ல ஸ்டேஷன் ரைட்டர் மெல்ல சரவணனையும், ஞானத்தையும் சமீபித்தார்.

''தம்பி! தைரியமா நில்லுங்க. இந்த ஆள் ஒரு மாதிரி. ஏரியா எம்.எல்.ஏ.வைத் தெரியும்னு சொல்லுங்க. வழிக்கு வந்துடுவாரு. இல்லாட்டி தலைல மிளகா அரைச்சிடுவாரு.''

- என்று காதோரமாய் கிசுகிசுத்து விட்டு விலக, எஸ்.ஐ.யும் திரும்பி வந்தார்.

மீண்டும் முறைப்பு.

சரவணனும் புத்திசாலித்தனமாய்ப் பேச ஆரம்பித்தான்.

''எஸ்.ஐ.சார்! நான் இந்தத் தொகுதி எம்.எல்.ஏ. வெற்றிக்காக பாடுபட்ட ஒருத்தன். என்கிட்ட நீங்க தப்பா நடந்துகிட்டா அதோட விளைவு ரொம்ப மோசமா இருக்கும்.''

- அடுத்த வினாடியே எஸ்.ஐ.யிடம் தடுமாற்றம். ''இதை முந்தியே சொல்றதுக்கென்ன.... அடடா... நான் ஏரியா ரவுடிப்பசங்கள டீல் பண்ற மாதிரி பண்ணிட்டேனே. சாரி... வெரிசாரிசார். சாரி.'' - என்று வழிந்தார். ரைட்டர் அதைப் பார்த்து ரகசியமாய் சிரித்துக் கொண்டபோது இன்னொரு ஆச்சரியம். ஸ்டேஷன் வாசலில் ஆட்டோவிலிருந்து பெட்டியைத் தொலைத்த பெரியவர் சக்தி பெருமாளே இறங்கிக்கொண்டிருந்தார்!

விடுவிடுவென்று நடந்து உள்ளே நுழைந்தவரைப் பார்த்து சரவணனே ஆச்சரியப்பட்டுப் போனான். ரயிலில் அருகில் அமர்ந்திருந்தபோது அவன் மூக்கைத் துளைத்த அதே ஜவ்வாது வாசனை இப்பொழுதும் மூக்கை நிமிண்டியது. ''ஐயா! நீங்கதானே இந்த பெட்டியைத் தொலைச்சவர்?'' - என்று அவரைப் பார்த்து பரவசத்தோடு கேட்டான். அவரும் ஒரு சின்னப் புன்னகையோடு அதை அங்கிகரித்துக் கொண்டார். எஸ்.ஐ. பார்வை அவரை அளக்க ஆரம்பித்தது.

''சப்-இன்ஸ்பெக்டர் சார்... நான் பத்து லட்ச ரூபாயோட ஒரு பிரீஃப்கேஸை தொலைச்சிட்டேன். கம்ப்ளைண்ட் கொடுக்கத்தான் வந்தேன். வந்தா வந்த இடத்துல நான் தொலைச்ச பெட்டியே இருக்குது. நல்லவேளை ஒரு கெட்டதுலையும் எனக்கு நல்லதுதான் நடந்திருக்கு...'' - என்றார் அந்த பெரியவர்.



''அப்ப... இந்த பாக்ஸ்தானா?''

''ஆமாம்... அதுல மூணு லட்சரூபாய்க்கு ஐந்நூறு ரூபாய் நோட்டும், இரண்டு லட்சத்துக்கு ஆயிரம் ரூபாய் நோட்டும், மீதிக்கு நூறு ரூபாய் நோட்டும் இருக்கும். பாருங்க தெரியும்.''

- அதன்பின் பார்க்க வேண்டியதைப் பார்த்து செய்ய வேண்டியதைச் செய்து அவர்களை வெளியே விட்டார் சப்-இன்ஸ்பெக்டர்.

வெளியே வந்த சரவணன் ஞானத்தைப் பார்த்து பெருமூச்சுவிட்டான்.

''ஒரு நல்லது பண்றதுக்குக்கூட இவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கு...'' - என்று சலித்துக் கொண்டான்.

அவரோ ''ரொம்ப நன்றி தம்பி...'' என்று கையைப் பிடித்துக் கொண்டார்.

''அம்மாவுக்கு சொல்லுங்க. நான்கூட கொஞ்சம் யோசிச்சேன்.'' - என்று உண்மை பேசினான் சரவணன்.

''நல்ல அம்மா... நல்ல பிள்ளை... உங்களுக்கு பிரமாதமான எதிர்காலம் இருக்கு!'' - என்றார் பெரியவர்.

அவன் உதட்டில் அடுத்த நொடி விரக்திச் சிரிப்பு.

''என்ன தம்பி? எதுக்காக இப்படி விரக்தியா சிரிக்கிறே?''

''சிரிக்காம என்னத்தங்க பண்றது?''

''சிரிக்கற அளவுக்கா நான் வாழ்த்தியிருக்கேன்.''

''அப்படி இல்லீங்க. நீங்க எதிர்காலம் இருக்குன்னு சொன்னதை நினைச்ச உடனே என் கஷ்டங்கள் ஞாபகம் வந்தது. அதுசரி... எப்படி பெரியவரே இப்படி பத்து லட்ச ரூபாயை மறந்துட்டு ரயிலை விட்டு இறங்க உங்களுக்கு மனசு வந்தது?''

- இப்பொழுது அவர் பதிலுக்கு சிரித்தார்.

''இனிமேலாவது பணத்தை பத்ரமா வெச்சுக்குங்க. நல்லவேளை... நீங்க வந்ததால என் மகனை அந்த போலீஸ்காரர் விட்டார். இல்லேன்னா அவனை ஒரு திருடன்னு சொல்லி முத்திரை குத்தியிருப்பார்.'' - ஞானம் இடைவெட்டிப் பேசினாள்.

''எது எப்படி நடக்கணுமோ அப்படி நடந்து தானேம்மா தீரும். உண்மையில உண்மையா இருக்கறவங் களுக்கு எப்பவும் பிரச்சினை இல்லம்மா...''

''அப்படித் தெரியலீங்க. கலியுகம் ரொம்ப மோசமானதுன்னு புத்தகத்துல படிச்சிருக்கேன். இப்ப அதை தினமும் அனுபவிக்கிறேன்.''

''அப்படிச் சொல்லாதீங்க. உங்களுக்கு என்ன சிக்கல்?''

''குடியிருக்க ஒரு வீடு இல்லை. சொந்த வீட்டுக்கு கூட நாங்க அலையலை - வாடகை வீடு ஒண்ணுக்கு என் பையன் அலையறான். ஆனா அதுகூட நல்ல விதமா கிடைக்க மாட்டேங்குது.''

''இவ்வளவுதானா?'' - அவர் கேட்ட விதத்தைப் பார்த்தால் அது ஒரு விஷயமே இல்லை என்கிற மாதிரிதான் தோன்றியது.



## 6

'வாழ்க்கையில் உண்மையில் துன்பம் என்று ஒன்று இல்லவே இல்லை. உண்மையான துன்பம் என்பது நம்மை மயக்கும் இன்பங்களே என்றால் நம்பமுடிகிறதா?''

**சா**ப்பிட்டு முடித்து கைகழுவி விட்டு ஹாலில் வந்து அமர்ந்தார் பெரியவர்.

அவர் முன்னால் சரவணனிலிருந்து அவன் குடும்பம் மொத்தமும் கூடியிருந்தது. குழந்தை வீணா வாயில் விரல் சப்பியபடி பெரியவரைப் பார்க்க, அவளை அழைத்து மடியில் அமர்த்திக் கொண்டார் அவர்.

''கவலைப்படாதீங்க... உங்களுக்கு நான் உதவி செய்யறேன்'' என்று அவர் சொல்ல, அதைக் கேட்டு கொஞ்சம் போல தெம்பாகியிருந்தான் சரவணன்.

''இவ்வளவு சொல்ற என்னை உன் வீட்டுக்கு கூப்பிடமாட்டியா?'' - இதுவும் அவர்தான்.

''வாங்க பெரியவரே... உங்களுக்கு இல்லாத உரிமையா?'' -என்று கேட்டு, வீட்டுக்கும் அழைத்து வந்து விட்டான் அவரை.

வந்தவரை சாப்பிடச் சொல்லாவிட்டால் எப்படி? சொன்ன உடனேயே அவரும் ஏதோ மகன் வீட்டில் கை நனைக்கும் தகப்பனைப் போல உடனேயே சாப்பிட அமர்ந்துவிட்டார். சாப்பிட்டும் முடித்துவிட்டார்.

''நான் என்ன நினைக்கறேன்னா... ஒரு பத்தாயிரம் பதினஞ்சாயிரம் இனாமா தருவார். பெரிய மனுஷன் மாதிரி

வேண்டான்னு சொல்லிடாதிங்க.'' - என்று சங்கீதா அவன் காதோரம் குசுகுசுத்தபடி நிற்க அவரும் வாயைத் திறந்தார்.

''இந்தப் பணம் என்னோட பணமே இல்லை. நான் ஒரு சக்தி உபாசகன். ஒரு சேட்டோட மனைவிக்கு கேன்சர் வியாதி. அவ பூரண குணமாகறதுக்காக அம்பாளை வேண்டி ஜபம் செய்தேன். அவளும் குணமாயிட்டா! அதுக்காக இந்த பணத்தை சேட் கொடுத்தார். நானும் இதை ஏதாவது அநாதை ஆஸ்ரமத்துக்கு கொடுத்துடலாம்னு இருக்கேன்.''

- அவர் சொன்னதைக் கேட்டு சங்கீதாவுக்கு நெஞ்சு துடித்தது.

'இதுவும் ஒரு அநாதை ஆஸ்ரமம் மாதிரிதான். நீங்க அதை இங்கேயே தந்துடலாம்' - என்று அவள் உள்மனது சொன்னது. உரக்கச் சொல்லத்தான் முடியவில்லை.

''ரொம்ப நல்ல முடிவு... அப்படியே செய்துடுங்க'' - என்று ஞானம் அவர் பதிலுக்கு ஒரு மறுபதிலைச் சொன்னாள்.

''உங்களுக்கு ரொம்பப் பெரிய மனசு...'' - அவர் எதை வைத்து அப்படிச் சொன்னாரோ தெரியாது. பார்வை சங்கீதா மேல் வந்து நிலைத்து நின்றது.

''நீதான் இந்த வீட்டுக்கு மருமகளா?''

''அ... ஆமாம்!''

''நீ என்னம்மா நினைக்கறே...?''

''அது... அதத்தான் அத்தை சொல்விட்டாங்களே.''

''அப்படியா?'' -அவர் கேட்ட விதத்தில் ஏராள அர்த்தங்கள்.

''ஆமாம்... அதுதான் சரி.''



''ரொம்ப சந்தோஷம். இதை ஏன் நான் உங்ககிட்ட சொல்றேன்னா அந்த புண்ணியமெல்லாம் உங்களுக்குத்தான் வரப்போகுது.''

- சரவணன் அதைக் கேட்டு நெளிந்தான்.

''ரொம்ப சந்தோஷம். உங்க எண்ணப்படி அந்த புண்ணியத்தாலயாவது என் மகன் வேலைக்கு ஒரு குந்தகமும் வராம இருந்தா சரி.'' - இது ஞானம்.

''வேலைக்கு மட்டுமல்ல... உங்களுக்கு ஒரு வீடும் கிடைக்கப் போகுது.'' - அவர் புதிர் போட்டார்.

''வீடு... எங்களுக்கா?'' - சரவணன்தான் கேட்டான். சொல்லப் போனா நான் ஒரு சன்யாசி. இந்த சன்யாசிக்கு எதுக்கு வீடும் வாசலும்?''

- அவர் என்ன சொல்ல வருகிறார் என்றே புரியவில்லை. எல்லோர் புருவத்திலும் குழப்ப வளைவு.

''புரியலையா...?''

''ஆமாம் நீங்க என்ன சொல்றீங்க?''

''இந்த சென்னைல வேளச்சேரில கடல்போல ஒரு பங்களா எனக்கு சொந்தமா இருக்கு. அதை நான் தற்காலிகமா உங்களுக்கு கொடுத்துடலாம்னு இருக்கேன்.''

- அவர் அப்படிச் சொன்ன மறு நொடி எல்லோருக்குமே இன்ப அதிர்வில் நெஞ்சு படபடத்தது.

''பெரியவரே! நீங்க சொல்றது உண்மையா?''

''சந்தேகமா இருந்தா என்கூட வந்து பார் சரவணா...''

''அதுக்கில்ல... நீங்க யாரோ நாங்க யாரோ... எங்களுக்கு போய் உங்க பங்களாவை...''

''ஏன்... உங்களுக்கு நான் அதை வாடகைக்கு தரக்கூடாதா?''

''வாடகைக்கா... பங்களாவையா?''

''ஆமாம்... சும்மா ஒரு நூறு ரூபா வாடகை நீ தந்தா போதும். அதுகூட தர முடியலேன்னா பரவாயில்ல.'' - அவர் முடிக்க, அனைவரும் மேலும் அதிர ஞானம் பரவசத்தின் உச்சிக்கே போய்விட்டாள்.

''ரொம்ப சந்தோஷம்ங்க... ஆனா ஒரு பங்களாவை பராமரிச்சு அதுல குடியிருக்கற அளவுக்கு எங்களுக்கு வசதி கிடையாது.''

''அந்த வீட்டுக்குப் போற நேரம் வசதிகள் வரலாம் இல்லையா?''

''என்ன சொல்றீங்க... எங்களால உங்களோட பேச்சை நம்ப முடியலை.''

''இப்ப அப்படித்தான் இருக்கும். பங்களாவை வந்து பாத்துட்டு சொல்லுங்க.''

''இதுல பார்க்க என்ன இருக்கு... ஆமா நீங்க எங்க இருப்பீங்க?''

''நான் நூத்தி எட்டு சக்தி ஸ்தலத்துக்கும் யாத்திரை போய் வரப்போறேன். அது முடிய எப்படியும் மூணு வருஷம் ஆகலாம்.''

''அப்ப அந்த மூணு வருஷம்தான் எங்களுக்கு அந்த பங்களாவா?'' - இப்படிக் கேட்டவள் சங்கீதா.

''ம்... அப்படித்தான் வெச்சுக்குங்களேன். என் பங்களாவை ஒரு நல்ல குடும்பத்துகிட்ட விட்டுட்டு போற



ஒரு திருப்தி எனக்கு கிடைச்சா போதும். இதுகூட ஒரு சுய நலம்தான்.''

-என்னவோ தெரியவில்லை அவர் அப்படிச் சொல்லியும் ஞானத்துக்கு நெருடலாகத்தான் இருந்தது.

''உங்களுக்கு எங்கமேல ஏன் இவ்வளவு அக்கறை?''

''உங்க நேர்மைக்கு நான் செய்யற ஒரு சிறு சகாயம். அவ்வளவுதான்.''

''நேர்மைக்கு பதிலா சகாயத்தை வாங்கிக்கறது பாவமில்லையா?''

''ஒரு பாவமுமில்லை. சொல்லப் போனா நான் என் வீட்டை உங்களை நம்பி ஒப்படைக்கிறேன். அது பாதுகாப்பா இருக்கும்னு நம்பறேன்.''

''நீங்க யாருக்காவது வாடகைக்கு விட்டாலும் அதே பாதுகாப்பு இருக்குமே...''

''யாருக்கோ வாடகைக்கு விட்றதுக்கு நான் உங்களுக்கே விடலாமே. நீங்க யாரையோவிட எதுல குறைஞ்சவங்க?''

-அவர் அப்படிக் கேட்டபின் அதற்கு மேல் ஞானத்தால் பதில் பேசமுடியவில்லை.

''சும்மா பதிலுக்கு பதில்னு சொல்லாம ஒத்துக்குங்க அத்தை. மூணு வருஷம்தானே... இவர் வாய் முகூர்த்தம் நாம அந்த வீட்டுக்குப் போய் பெரிய ஆளா வரலாம் இல்லையா?''

-சங்கீதா தன் பேராசையை பட்டவர்த்தனமாக காட்டினாள்.

''சரி... இனி அவர் விருப்பம்.'' - ஞானம் அரை மனதாக சொல்ல ஒரு முக்கியமான விஷயம்...'' - பெரியவர் இறுதிக் கட்டத்தில் அப்படிச் சொல்லி இடைவெளியும்விட எல்லோரும் அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்று அவரையே வெறித்தனர்.

''என்ன... வீட்டுல, சாரி உங்க பங்களாவுல சுவத்துல ஆணி அடிக்கக்கூடாது, சுத்தபத்தமா வீட்டை வெச்சுக் கணும்னு சொல்லப் போறீங்களா?'' - சங்கீதாதான் கேட்டாள்.

''இல்லை... அதெல்லாம் உங்க் விருப்பம்.'' - அவர் பதில் ஆச்சரிய மூட்டியது.

''அப்படின்னா என்ன அந்த முக்கிய விஷயம்?''

''அந்த பங்களாவுல மாடியில ஒரு அறை இருக்கு.''

''சரி... அந்த அறைக்கென்ன?''

''அதை மட்டும் எந்தக் காரணம் கொண்டும் நீங்க திறக்கக்கூடாது.''

- அவர் சொன்ன விதத்தில் இனம் புரியாத மர்மம்.

''அந்த அறைல அப்படி என்ன இருக்கு?''

''அது உங்களுக்குத் தேவையில்லாத விஷயம். அதை திறக்கக் கூடாதுன்னா திறக்கக்கூடாது.''

''நீங்க பூட்டி சாவி எடுத்துக்கிட்டு போயிடுங்க. எதுக்கு எங்ககிட்ட சொல்றீங்க?''

''அதை நான் எப்பவும் பூட்டினதேயில்லை. பூட்டவும் கூடாது. வெறுமன சாத்திதான் வெச்சிருக்கேன்.''

''ஏன் அப்படி?''



''அப்படித்தான்... 'அதை எந்தக் காரணம் கொண்டும் திறக்கமாட்டோம்'னு சத்தியம் செய்து தந்தா நான் அந்த பங்களாவை உங்களை நம்பி ஒப்படைக்க தயாராக இருக்கேன்.''

- பெரியவர் சொன்னது சரவணனை மிகவும் ஆச்சரியப்படுத்தியது. ஞானத்தைப் பார்த்தான். அவள் முகத்திலும் ஆச்சரிய ரேகைகள்.

''என்ன யோசனை... அங்க ஏதாவது பேயோ பிசாசோ இருந்து அதை நான் மறைக்கறதா ஒரு நினைப்பு தோணுதோ?''

''சேச்சே... அதெல்லாம் இல்லை. அதை நீங்க பூட்டாம வெச்சிருக்கறதுதான் புரியலை!''

''சரி... பூட்டி சாவியை எடுத்துக்கிட்டே போயிட் றேன். இப்ப உங்களுக்கு ஆட்சேபனை இல்லையே...?''

- அவர் அப்படிச் சொன்ன மறு நொடியே எல்லோர் முகத்திலும் மலர்ச்சி. இருந்தும் சுதாவும் லதாவும் ஒருவரையொருவர் பார்த்தபடி ஒதுங்கினர்.

''லதா! இவர் பேசற எல்லாமே அன்யூஷுவலா இல்ல?''

''ஆமாண்டி. எனக்கு ஒண்ணுமே புரியலை. யாராவது ஒரு பங்களாவை நூறுக்கும் இருநூறுக்கும் வாடகைக்கு விடுவாங்களா?''

''சரி... சரி... சத்தமா பேசாதே. நமக்கெதுக்கு வம்பு? நாம எதாவது பேசப்போய் அண்ணி கத்தப் போறா. அவளுக்குதான் ஓசியில எது கிடைச்சாலும் பிடிக்குமே...''

-இருவரும் அமரிக்கையாக பேசி விட்டுத் திரும்ப அந்த பெரியவர் ஆசீர்வதித்துவிட்டு புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

சரவணன் வாசல் வரை சென்று அவரை வழி அனுப்பிவிட்டு வந்தான்.

வந்த ஜோரில் ''நாளைக்கே வீட்டைப்போய் பாத்துடுவோம்'' என்றான் அவன் மனைவி சங்கீதாவிடம்.

''இப்பவேகூட அவர்கூட போய் நீங்க பாத்துட்டு வந்திருக்கலாம்...'' சங்கீதா, லதா - சுதாவின் கருத்துக்கு சுருதி சேர்க்கிற மாதிரிதான் சொன்னாள்.

லதாவும் சுதாவும் மீண்டும் ஒருமுறை தங்களை பார்த்துக்கொண்டனர். 'இது எதில் போய் முடியுமோ?'

பெருமூச்சு!

## 7

'அழகான ஆசைகள் மோட்சத்துக்கு வழி காட்டும். அதிகமான ஆசைகள் மோசத்துக்குத்தான் வழிகாட்டும்!'

வேளச்சேரி!

பங்களா மிரட்டலாக சரவணனையும் அவன் குடும்பத்தையும் வரவேற்றது.

சினிமாக்காரர்கள் பார்த்தால் விடமாட்டார்கள். அப்படி ஒரு விஸ்தீரணம். முன்னால் தோட்டம். அதில் விசிறி வாழை! ஒரு சன்யாசிக்கு எதற்கு இத்தனை பெரிய



வீடு என்கிற கேள்வி பார்த்த மாத்திரத்தில் லதாவுக்கும் சுதாவுக்கும் வந்துவிட்டது.

பெரியவர் தோட்டத்தில் ஒரு மூங்கில் நாற்காலியில் உட்கார்ந்து தேவிபாகவதம் படித்துக் கொண்டிருந்தார். தாடியை நீவிக் கொண்டே அவர் படித்துக் கொண்டிருந்த விதமும் சரவணன் குடும்பத்தோடு ஒரு ஆட்டோவில் வந்து இறங்க - அவர்களைப் பார்த்து சிரித்த விதத்திலும் ஏதோ ஒரு உள்ளர்த்தம் பொதிந்திருந்தது.

''வந்துட்டீங்களா?''

''வந்துட்டோம் சாமி...'' - என்ற சரவணன் மிகப் பணிவாக அவர் காலில் எல்லாம் விழுந்து எழுந்தான். சங்கீதாவோ வீட்டின் விஸ்தீரணத்திலேயே கவனமாக இருந்தாள். அவளுக்கு ஏற்கெனவே நன்கு பெரிய பெரிய விழிகள். அது காதுவரை விரிந்து அவள் வியப்பின் உச்சியில் இருப்பதை சொல்லாமல் சொன்னது.

ஞானமும் வியப்பில்தான் இருந்தாள். உள்ளூர ஒரு சின்ன பயம் அவளுக்குள் கபடி விளையாடியபடி இருந்தது. அது கண்ணிலும் தெரிந்தது.

''என்னம்மா... இவ்வளவு பெரிய பங்களாவான்னு ஆச்சரியமா இருக்கா?''

''அ... ஆமாங்க...''

''எல்லாம் என் பூர்வீக சொத்து.''

''இந்த சொத்துக்கு வாரிசுகள் இல்லையா?''

- ஞானம் நியாயமான அந்தக் கேள்வியை முன்பே கேட்டிருக்க வேண்டும். இருந்தும் இப்பொழுதுதான் கேட்டாள். பெரியவர் சிரித்தார்.

''யாரும் இல்லைம்மா. நான் ஒரு ஒண்டிக்கட்டை'' என்றார்.

''தூரத்து சொந்தம்னுகூடவா யாரும் இல்லை...?''

- இது லதா. பெரியவர் திரும்ப சிரித்தார்.

''இல்லைன்னுதான் சொல்லணும்...'' என்றார்.

''ஆச்சரியமா இருக்கு...'' இது சுதா.

''வாழ்கைல எவ்வளவோ ஆச்சரியங்கள். அதுல இதெல்லாம் ஒண்ணுமேயில்லம்மா...''

- அவர்கள் இப்படி பேசிக் கொள்ள சங்கீதாவுக்கு எரிச்சலாக வந்தது.

''ஏய் லதா... சுதா... என்ன இது பெரியவரைக் கேள்வி மேல கேள்வி கேட்டுக்கிட்டு. ஐயா நீங்க வாங்க... வந்து வீட்டைக் காட்டுங்க...'' - என்று படபடத்தாள்.

பெரியவரும் ''வாங்க வாங்க...'' - என்று அவர்களை உள்ளே அழைத்துச் சென்றார்.

பங்களாவின் ஒவ்வொரு பாகமும் மிரட்டலாக இருந்தது. தரையெல்லாம் மார்பிளில் இழைக்கப் பட்டிருந்தது. கதவும், நிலையும் தேக்கு மரத்தில் வார்னீஷ் பூச்சில் ஜொலித்தது. சங்கீதா வாயைப் பிளந்தாள்.

''வாவ்... எவ்வளவுக்கெவ்வளவு அடைஞ்சு கிடந்தோமோ அவ்வளவுக்கவ்வளவு இங்க சுதந்திரமா இருக்கப் போறோம். ஆமா... மொத்தம் எத்தனை ரூம்கள்...?''

''அது இருக்கும்மா ஒரு ஏழு ரூம்...''

''அப்ப ஆளுக்கு ஒரு ரூம் எடுத்துக்கலாம். பிரச்சினை இல்லை.''

''அண்ணி... இப்ப ரூம் இருக்கு - பிரிச்சுக்கலாம். ஆனா எல்லாம் மூணு வருஷத்துக்குத்தான். அப்புறம் இவர்



வந்துட்டா நாம பழையபடி ஒண்டுக் குடித்தனத்துக்குத்தான் திரும்பணும். ஞாபகம் வெச்சுக்குங்க...''

- லதா ஒட்டியும் ஒட்டாமலே பேசினது சங்கீதாவுக்கு எரிச்சலைத் தந்தது.

''ஏண்டி அப்படி பேசறே... பெரியவரே மனசு மாறி நீங்களே இங்க இருங்க. உங்களோட நானும் இருந்துக்கறேன்னு சொல்லலாம் இல்லையா?''

- சங்கீதா மிக சாமர்த்தியமாக பேசிவிட்டதாக நினைத்துக் கொண்டு பெரியவரைப் பார்த்தாள். அவர் முகத்தில் அழையாத அந்த மர்மப் புன்னகை.

இறுதியாக மாடியில் உள்ள அந்த அறைக்கு முன்னால் சென்றபோது அதை பெரியவர் பூட்டியிருந்தார்.

''இதுதான் நீங்க திறக்கக்கூடாத என்னோட அறை. திறக்கக் கூடாதது மட்டுமில்ல - ஜாக்ரதையாவும் பாத்துக்கணும்'' - என்றார்.

சங்கீதா அந்த அறையின் கதவை ஊன்றிப் பார்த்தாள். ஒரு கோவிலின் கர்ப்பக்கிரகக் கதவு போல அதில் சந்தனம் பூசி பொட்டெல்லாம் வைக்கப்பட்டிருந்தது. அந்த நாளைய கொண்டி போட்ட தாழ்ப்பாள். அதன் துவாரக் காதுக்குள் அடைபட்டுத் தொங்கும் ஒரு சாதாரண பூட்டு.

பூட்டையும் கதவையும் எல்லோருமே பார்த்தார்கள். பெரியவரும் ''இந்த ரூம்தான் நான் சொன்ன அந்த ரூம்'' என்று கண் சிமிட்டினார்.

அப்பொழுதுகூட சுதாவுக்கும் லதாவுக்கும் அந்த ரூமில் விபரீதமாய் ஏதோ இருப்பதாகத்தான் தோன்றியது. இருப்பினும் சூழ்நிலையை உத்தேசித்து அடக்கிக் கொண்டனர்.

**சா**மான் செட்டெல்லாம் வந்து வீடு முழுக்க நிரம்பிவிட்டன. பெரியவரும் எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு 108 சக்தி ஸ்தல யாத்திரைக்குப் புறப்பட்டு விட்டார். சங்கீதாவுக்கு அந்த பங்களா வீடு மிகவும் பிடித்துப் போய்விட்டது. சுற்றிச் சுற்றி வந்தாள். தோட்டத்துப் பக்கம் வந்து எங்கே காய்கறி போடலாம், எங்கே கீரைகள் போடலாம் என்றெல்லாம் யோசிக்கத் தொடங்கிவிட்டாள்.

நடுநடுவே அந்த மாடி அறைப் பக்கமும் அவள் பார்வை போகத்தான் செய்தது. அதன் எதிரொலிகளையும் சரவணனிடம் அவ்வப்போது காட்ட ஆரம்பித்தாள்.

''ஏங்க... அந்த ரூம்ல என்ன இருக்கும்னு நீங்க நினைக்கிறீங்க...?''

''எது இருந்தா நமக்கென்ன சங்கீதா? அது நம்ம ரூம் கிடையாது. அதைப் பத்தி எதுக்கு அநாவசியமா? யோசிக்கறே?''

''இல்ல... எனக்கு அந்தப் பெரியவரை நினைச்சா ஒரு பக்கம் சந்தேகமா இருக்கு.''

''என்ன சந்தேகம்...?''

''எந்த ஒரு மனுஷனும் இவ்வளவு பெரிய வீட்டை இப்படி நூறு இருநூறுக்கு விட்டுட்டுப் போகமாட்டான். மீறிப் போறான்னா ஏதோ விஷயம் இருக்கணும்...''

''அதான் சொன்னார்ல... என் வீட்டைப் பாதுகாக்க நம்பிக்கை, நாணயமுள்ள ஒரு குடும்பம் தேவைன்னு. அதனால நமக்குக் கொடுத்திருக்கலாம்.''

''நானும் அப்படித்தான் நினைச்சேன். எதுக்கும் அந்த ரூமை திறந்து பார்த்துட்டா நிம்மதியாயிடும்னு மனசு நினைக்குதுங்க.''



''பாத்தியா... மனுஷ புத்தி ஒரு குரங்கு புத்திங்கறத நிரூபிக்கிறியே. அவர் இன்னும் இந்த டிஸ்ட்ரிக்கைக்கூட தாண்டியிருக்கமாட்டார். ஆனா அதுக்குள்ள அவர் கேட்ட வாக்குறுதியை மீறப் பார்க்கிறியே...?''

''பெரிய வாக்குறுதி. ஒரு இங்கிலிஷ் படத்துல வரிசையா கொலைங்க நடக்குது. செய்யறது யாருங்கறது பயங்கர சஸ்பென்ஸ். அதுலையும் இப்படித்தான் ஒரு தனிப்பட்ட அறை. அதுல நுழைஞ்சு பார்த்த பிறகுதான் விஷயமே போலீஸுக்குத் தெரியவருது. கொலைகாரன் ஒரு மனநோயாளி.''

''நீ என்ன சொல்லவர்றே... அந்த மாதிரி இந்த அறையிலும் ஏதாவது கொலை கிலை பண்ணி உடம்புகளைப் போட்டு மூடி வெச்சிருப்பார்னு கற்பனை பண்ணிப் பார்த்தியா?''

''இருக்கலாம் இல்லியா?''

''வாயைக் கழுவு. ஏன் இப்படி கண்டபடி கற்பனை பண்றே? அப்படி எல்லாம் இருந்தா நாம இந்த வீட்ல குடி இருக்க முடியுமா? நாத்தம் ஒரு கலக்கு கலக்கிடாது?''

-சரவணன் அதட்டலாகப் பேசி சங்கீதாவை அடக்கினான். அதே சமயம் ஆபீஸிலும் அவன் கொடி உயரத்தான் பறக்க ஆரம்பித்தது. *ERS* என்று மிரட்டி வந்த பி.எம். எதனாலோ *ERS* பற்றிப் பேசுவதே இல்லை. மாறாக ப்ரமோஷன் வேண்டுமானால் கிடைக்கலாம் என்கிற மாதிரி நிலை மாறிவிட்டது. எல்லாவற்றையும் வீட்டு ராசி என்றும் வைத்துக் கொள்ளலாம். நாள் செல்லச் செல்ல சங்கீதாவுக்கு அந்த பங்களா ஒரு அதிர்ஷ்டமான பங்களா என்கிற எண்ணம் வலுப்பட ஆரம்பித்து விட்டது.

சுதாவையும் லதாவையும் பெண் கேட்டு வந்த கும்பகோணம் செங்கமலத்தம்மாளும் மீண்டும் வந்தாள்.

''எப்பொழுது கல்யாணத்தை வெச்சுக்கலாம்?'' என்றுதான் எடுத்த எடுப்பில் கேட்டாள்.

'' அதுக்கென்ன இப்போ..வர்ற முகூர்த்தத்திலேயே வெச்சுக்கிட்டா போச்சு'' என்கிற பதிலைச் சொல்ல சங்கீதா துடித்தாள். ஆனால், சரவணன் மிகவும் அடக்கியே வாசித்தான். இருந்தும் ஒருநாள் அந்த நடக்கக்கூடாத ஒன்று நடக்க ஆரம்பித்துவிட்டது. எந்த அறையை திறக்கவே கூடாது என்று பெரியவர் கூறியிருந்தாரோ, அந்த அறைக்கதவைக் கண்ட கள்ளச்சாவிகளைப் போட்டு திறக்க முயன்று கொண்டிருந்தாள் சங்கீதா.

வசதியாக வீட்டில் சுதாவும் லதாவும் இல்லை. ஞானம்கூட ஒரு திருமணம் என்று வெளியூர் போய் விட்டிருந்தாள். சரவணனும் ஆபீஸ் போய்விட சங்கீதாவைக் குடை குடை என்று குடைந்தது அந்த அறைதான்.

'உள்ளே என்னதான் இருக்கிறது? எதற்காக இப்படி ஒரு ரகசியப்பூட்டு?'

கேள்விக்கு பதிலை நெடுநேரம் வரை பிரயாசைப் பட்டுக் கொண்டு திறந்த அறையின் பூட்டே சொல்லி விட்டது. ஏதா ஒரு கள்ளச்சாவி. மிக அழகாக பூட்டு திறந்தாகிவிட்டது. உள்ளே அப்படி என்ன இருக்கிறது?'

கேள்வியோடும் ஆர்வத் துடிப்போடும் மெல்ல உள்ளே எட்டிப் பார்த்தாள். மிக இருண்ட நிலையில் ஒரு மாதிரி வாசமடித்தது அறை. விளக்குக்கான ஸ்விட்சைப் போட்டாள். குபீர் என்று வெளிச்சம் பரவி அறையில் என்ன இருக்கிறது என்று காட்டியது. மிகப் பெரிய விசாலமான



அறை. சலவைக்கல்லால் ஆன ஜில்லென்ற தரை. அதன் நடுவில் இடுப்பு உயரத்திற்கு ஒரு ராஜேஸ்வரி தேவி விக்கிரகம். விக்கிரகத்திற்கு இரண்டு பக்கத்திலும் மரத்தால் ஆன ரேக்குகள். அதில் ஏகமாய் சுவடிகள்-வேத புத்தகங்கள் ஒரு ஓரத்தில் ஒரு ஆளை போட்டு மூடலாம் என்கிற அளவில் ஒரு கள்ளிப்பெட்டி.

சங்கீதா அறையைப் பார்த்து விக்கித்துவிட்டாள். அநேகமாய் அது பெரியவர் பூஜைசெய்து வந்த அறையாக இருக்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது.

ராஜேஸ்வரி விக்கிரகமும் ஏதோ அப்பொழுதுதான் யாரோ வணங்கி வழிபட்டது போல விளக்குகள் எரிய,தசாங்க வாசம் கமழ காட்சியளித்தது. சிலையின் உடம்பிலும் ஏராளமான நகைகள்!தேவி கண்ணைப் பறித்தாள். விழுந்து கும்பிடத் தோன்றியது-அத்தனை அழகு! அவ்வளவு தெய்வீகம்! பக்கத்திலேயே இருந்த கள்ளிப் பெட்டி பேறு பூட்டின்றி 'என்னைத் திறந்து பார்' என்று சொல்லாமல் சொல்ல அதையும் திறந்தாள்.

அப்படியே விக்கித்துப் போய் நின்றுவிட்டாள்.

உள்ளே குவியல் குவியலாக தங்க நகைகள். தங்க பிஸ்கட்டுகள். அதைப் பார்த்த மறுநொடி உள்ளுக்குள் பெரியவரின் பிம்பம் மரியாதை இழந்து போயிற்று. அவர் அநேகமாய் ஒரு திருடனாய் குறிப்பாக தங்கக் கடத்தல் அல்லது தங்க நகைகளைத் திருடும் ஒருவனாக இருக்கலாம் என்றுதான் தோன்றியது. இது தெரிந்துவிடக் கூடா தென்றுதான் அறையைத் திறந்து பார்க்கக்கூடாது என்று அந்தப் பெரியவர் சொல்லியிருக்கிறார் என்று அவள் மனது நிர்மானமாய் நம்பியது. கணவன் வந்தால் அவனிடம் இனி

தைரியமாக சொல்லலாம். நாம் ஒரு நல்ல வீட்டில் இல்லை - ஒரு கடத்தல்காரன் வீட்டில் இருக்கிறோம் என்று தாராளமாகச் சொல்லலாம் என்றெல்லாம் எண்ணம் பெருக்கெடுத்தது.

அதே சமயம் கும்பகோணம் செங்கமலத்தம்மாள் அனுப்பியதாக புரோக்கரும் வந்து பார்த்தார்.

''என்னம்மா... கல்யாண விஷயமாக என்ன முடிவு செய்திருக்கீங்க...?''

''என்ன முடிவுன்னா... நடத்திட வேண்டியதுதான்.''

''ரொம்ப தெம்பா சொல்றீங்களே. இரண்டு பொண்ணுக்கும் எவ்வளவு நகை போடறதா இருக்கீங்க?''

''என்ன... இருவருக்கும் சேர்த்து ஒரு அம்பது பவுன்.''

''அம்பது பவுனா... மை காட்!எங்க இருந்தும்மா இப்படி ஒரு தைரியமும் பெரிய மனசும் உங்களுக்கு வந்துச்சு? சரவணன் தம்பி நேத்துகூட கம்பெனில சம்பள உயர்வெல்லாம் இப்ப இல்லைங்கற மாதிரி சொல்லிக்கிட்டிருந்தாரே?''

''அப்ப..சம்பளம் ஒசந்தாதான் அவரால கல்யாணத்த நடத்தவே முடியுமா..? வேற வழியே அவருக்கு உங்களைப் பொறுத்தமட்டில் கிடையாதா?''

''அப்படித்தானேம்மா சரவணன் தம்பி சொல்லிக்கிட்டு இருந்துச்சு?''

''இனி அப்படி எல்லாம் அவர் சொல்லமாட்டார். அவர் பிசினஸ் பண்ணப் போறார்''.

''பிசினஸா... என்ன பிசினஸ்...?''



37671 646217

''அதை எல்லாம் உங்ககிட்ட சொல்லணும்ங்கற அவசியம் எங்களுக்கில்ல. அவரைப் பொறுத்தமட்டுல இந்த வீடு ராசியான வீடா அமைஞ்சிகிச்சு. அவர் இனி எதைத் தொட்டாலும் அது தங்கம்தான்...''

- சங்கீதா புதிய முடிவுகளோடு மிக தெனாவெட்டாக பேசினாள். புரோக்கர் கல்யாண சுந்தரம் ஒருபுறம் மகிழ்ந்தும், மறுபுறம் சற்று குழம்பியும் போனார். ஆனாலும் கல்யாணம் நடக்கப் போவதில்,அதுவும் படு ரிச்சாக நடக்கப் போவதில் அவருக்கு சந்தோஷமாகத்தான் இருந்தது.

## 8

'ஆசையை வைத்துத்தான் விதி வாழ்க்கையையே உருட்டி விளையாடுகிறது. அநேகமாக அந்த விளையாட்டில் ஆசைக்கு தாயம் எப்பொழுதும் விழத் தவறியதேயில்லை!'

வேலை முடிந்து வீட்டிற்கு திரும்பிய சரவணனை காத்திருந்த மாதிரி கவ்விக் கொண்டாள் சங்கீதா.

புரோக்கர் கல்யாண சுந்தரம் வந்துவிட்டுப் போனதையும் அம்பது பவுன் போட்டு திருமணம் செய்யப் போவதாக சொன்னதையும் அவன் முன் சொன்னாள்.

''அம்பது பவுனா...! எங்க இருக்கு சங்கீ...?''

அதிர்ச்சியுடன் திரும்பிக் கேட்டான் சரவணன்.

''இருக்குங்க...இந்த வீட்டுல அம்பது பவுன் இல்லீங்க, ஐயாயிரம் பவுன் வரை இருக்குங்க.''

சங்கீதா அதிகபட்ச அதிர்ச்சியளித்தாள்.

''என்ன சொல்றே சங்கி...?!''

''நான் ஒரு பெரிய ரகசியத்தை இப்ப உங்ககிட்ட சொல்லிக்கிட்டு இருக்கேன். ஞாபகம் வெச்சுக்குங்க.''

''ரகசியமா..?''

''ஆமாம், ரகசியம்தான். இந்தவீட்டுப் பெரியவர்பத்தி நான் சந்தேகப்பட்டு பேசினப்போ அதை கற்பனைன்னு சொன்னீங்கள்ல...''

''ஆமாம் இப்ப என்ன அதுக்கு?''

''பெரியவர் ஒரு பெரிய ஸ்மக்ளர்ங்க...''

''ஸ்மக்ளரா...!என்ன சொல்றே சங்கி..?''

''ஆமாங்க...அவர் சாமியார் வேஷத்துல இருக்கற ஒரு கள்ளக்கடத்தல் பேர்வழி...''

''எதை வெச்சுச் சொல்றே...?

''வாங்க காட்றேன். வீட்ல உங்கம்மாவும் தங்கச்சிகளும் இல்லாத இந்த டைம்தான் சரியான டைம்.''சங்கிதா அவனை இழுத்துக்கொண்டு மாடிக்குச் சென்றாள். மாடிக்கு செல்லத் தொடங்கும்போதே சரவணனுக்கு புரிந்துவிட்டது ''என்ன சங்கி அந்த ரூம் கதவைத் திறந்து,தப்பு பண்ணிட்டியா?''

''இல்லீங்க..ரூம் கதவை திறந்து தப்பு பண்ணினதை கண்டுபிடிச்சிருக்கேன்.''.

''அப்படின்னா திறக்கக்கூடாத அந்தக் கதவை திறந்துட்டியா?''

''பெரிய்ய திறக்கக் கூடாத கதவு. அந்த கிழவனார்' பெரிசா பீடிகை போடும்போதே எனக்குத் தெரியும், அங்க எசகுபிசகா ஏதோ இருக்குதுன்னு...''



''இப்ப அங்க எசகுபிசகா என்ன இருக்குது?''

''வாங்க வந்து பார்த்துட்டு சொல்லுங்க...''

சொன்னபடியே கதவைத் திறந்து உள்ளே நுழைந்தவள் கள்ளிப் பெட்டியையும் காட்டினாள். அதைத் திறந்து பார்த்த சரவணன் விக்கித்து வெலவெலத்துப் போய்விட்டான்.

''சங்கி...அவ்வளவும் தங்க நகையா சங்கி..?''

''பின்ன...எல்லாத்தையும் எடுத்து உரசிப் பார்த்துட்டேன்.எடைகூட போட்டுட்டேன். கிட்டத்தட்ட அம்பது கிலோ இருக்குதுங்க..''

''அம்பது கிலோவா?'' வாயைப் பிளந்துவிட்டான் சரவணன்.

''ஆமாங்க...இவ்வளவு தங்கம் ஒரு இடத்துல இருக்குதுன்னா என்னங்க அர்த்தம்...?''

''என்ன அர்த்தம்?''

''இது நேர் வழியில சம்பாதிச்சது கிடையாதுன்னு அர்த்தம்...''

''அப்படின்னா கள்ளக்கடத்தலா..?''

''இப்பவாவது புரிஞ்சுக்கிட்டு சரியா கேட்டீங்களே. இந்த உண்மையை நாம தெரிஞ்சுக்கக்கூடாதுன்னுதான் அந்த பெரியவர் இந்த ரூமை திறக்கக் கூடாதுன்னு சொல்லியிருக்கார்.''

''இருக்கும்...இருக்கும்...''

சரவணன் சங்கீதாவுக்கு ஜால்ரா தட்ட ஆரம்பித்து விட்டான். கதவை திறந்தது,இப்படி ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பது எல்லாம் தவறு என்கிற பிரக்ஞையே

இப்பொழுது அவனிடம் இல்லை. சங்கீதாவின் கேள்விகள் அவனை அந்த அளவு மாற்றிவிட்டிருந்தன.

''ஆமாம், அந்தப் பெரியவர் வந்து நாம கதவைத் திறந்ததைத் தெரிஞ்சுக்கிட்டா...?''

''அதுக்குதான் அவர் சொன்ன மாதிரி இன்னும் மூணு வருஷம் இருக்குதே?''

''அப்ப மூணு வருஷத்துக்கு அந்த ஆள் இந்த வீட்டுப் பக்கம் வரமாட்டார்ன்னு நீ நம்பறியா?''

''அவர்தானே சொன்னாரு...''

''அவர் சொன்னாரு சரி... ஆனா எந்த ஒரு கடத்தல்காரன், இல்ல இப்படி கிலோ கணக்குல நகை வெச்சிருக்கறவன் ஒமை வெறுமனே பூட்டிட்டு மட்டும் போவான்?''

''அப்படின்னா...?''

''இதுக்குப் பின்னாடி ஏதோ மர்மம் இருக்குது சங்கீ...!''

''மர்மமா...?''

''ஆமாம்... திருட்டுச் சரக்கை நமக்கே தெரியாம நாம பாதுகாக்கணும்னு நினைக்கறாரோ என்னவோ...? அதே சமயம் போலீஸ் சந்தேகப்பட்டு தேடத் தொடங்கியிருக்கலாம். அதனால நம்மளை இப்படி காவலுக்கு விட்டுட்டு போய்ட்டாரோ?''

இருவருக்குள்ளும் சந்தேகப் பிசாசு விளையாடத் தொடங்கிவிட்டது.

அவரது சொல்லை மீறிச் செயல்பட்டது ஒரு தவறு என்கிற பிரக்ஞையே அற்றும் போனது.



''சரி இப்ப என்ன செய்யலாம்கறே...?''

''எனக்கென்னவோ நாம இங்க குடி இருக்கறது பெரிய தப்பா தெரியுது. நாளைக்கே அங்கத் தொட்டு இங்கத் தொட்டு போலீஸ் நம்மக்கிட்ட வந்தா?''

''ஓ... நீ அப்படி வர்றியா?''

''ஆமாங்க... பேசாம நாம காலி பண்ணிடுவோம். வீடு பூட்டியே இருக்கட்டும். அவர் வந்து பார்த்து உண்மையைத் தெரிஞ்சுக்கட்டும்.''

''அப்ப இந்த தங்கமெல்லாம்...?''

''இதுதான் எனக்கும் பெரிய தர்மசங்கடமா இருக்குது. நமக்கு இருக்கற நெருக்கடிக்கு இதுல ஒரு கிலோவை எடுத்துக்கிட்டாக்கூட யாருக்கும் தெரியப் போறதில்லை. அதே சமயம் இதனாலேயேகூட பிரச்சினை வந்துடுமோன்னும் பயமா இருக்குங்க...''

''அவசரப்பட்டுடாதே சங்கீ... அந்தப் பெரியவர் நம்மை வசமா மாட்ட உட்டுட்ட மாதிரிதான் தெரியுது. நாம இங்க எதையும் தொடாம சைலண்ட்டா நழுவிட்றதுதான் நல்லது.''

''நழுவுவோம், அதே சமயம் நம்ம சுதாவுக்கும், லதாவுக்கும் போட்றதா சொன்ன அம்பது பவுன் நகையை மட்டும் நாம இதுல இருந்து எடுத்துக்குவோம்.''

''என்ன சங்கீ... இப்பதானே சொன்னே இது திருட்டுச் சொத்தா இருக்கலாம் - இதை தொட்டா ஆபத்து வரலாம்ன்னு...''

''உண்மைதான். ஆனா அம்பது பவுனை ஒண்ணும் தெரியற மாதிரி எடுக்க வேண்டாம். இதுல இருந்து எடுக்ற

அம்பது பவுன் நகைக்கு பதில் ரோல்டு கோல்டு நகை வாங்கி உள்ள வெச்சுடலாம். அப்படிச் செய்தா யாருக்குத் தெரியப் போவுது?''

''வேண்டாம் சங்கி...'எப்ப நாம அந்தப் பெரியவரைப் பத்தி தெரிஞ்சுக்கிட்டோமோ... அப்பவே தப்பிச்சுக்கப் பாக்கறதுதான் நல்லது.''

''சரி... அப்ப அந்த அம்பது பவுனை நீங்களே உங்க சம்பாதியத்துல வாங்கிடுங்க...''

''என்ன விளையாட்டியா? வேலை காலி ஆகாம தப்பிச்சதே பெரிய விஷயம்னு நான் நினைச்சுக்கிட்டிருக் கேன். நீ என்னடான்னா அம்பது பவுனை வாங்குன்னு சாதாரணமா சொல்றே...''

''அது எனக்கும் தெரியும். 'கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசை'ன்னா எப்படிங்க. சில நேரங்கள்ல புத்திசாலித்தனமாவும் துணிச்சலாவும் முடிவுகளை எடுத்துதான் தீரணும்.''

- இருவரும் பேச்சை வளர்த்தபடி இருக்கும்போது அந்த பங்களாவுக்கு ஒரு தந்தி வந்தது. தந்திக்காரர் பஸ்ஸரை அழுத்தி இருவரையும் மாடி அறையைவிட்டு கீழே வரும்படி செய்தார்.

சரவணனும் தந்தியைக் கையெழுத்துப் போட்டு வாங்கி அதைப் பார்த்தான்.

- பார்த்தவனுக்கு மயக்கம் வராத குறை.

''என்னங்க... என்ன விஷயம்...?''

''சங்கீ... அந்தப் பெரியவர் இல்லை... பெரியவர்...''

''யாரைச் சொல்றீங்க...? எந்தப் பெரியவர்?''



''ஐயோ இப்ப நாம பேசிக்கிட்டிருந்தோமே... அவரைத்தான் சொன்னேன்.''

''அவருக்கென்ன... அவரை போலீஸ் கிலிஸ் பிடிச்சுட்டாங்களா... ஏதாவது சிக்கலா?''

''போலீஸும் பிடிக்கலை கிலீஸும் பிடிக்கலை. யாத்திரை போன மனுஷனை கங்கை வெள்ளம் அடிச்சுக் கிட்டு போயிடுச்சாம். கரைல கிடந்த அவரோட சூட்கேஸை வெச்சு காசி போலீஸ் அவர் அட்ரஸான இந்த அட்ரஸுக்கு தகவல் கொடுத்திருக்காங்க.''

''என்னது... பெரியவரை வெள்ளம் கொண்டுகிட்டு போயிடுச்சா...?''

- சங்கீதா அருகில் உள்ள சோபாவில் பொத்தென்று விழுந்தாள்.

''ஆமாம்... அவர் உறவினர்கள் வந்து அவருடைய பொருட்களை வாங்கிக்கிட்டு போகச் சொல்லி தந்தி கொடுத்திருக்காங்க...''

''மைகாட்... என்னங்க இது? நாம விலக நினைச்சாலும் இந்த விவகாரம் நம்மை விடாது போல இருக்குதே?''

-சங்கீதா புலம்ப சரவணனும் யோசிக்கத் தொடங்கினான்.

## 9

'விதி விளையாடும் கண்ணாமூச்சியில் உண்மையில் உண்மையாக இருந்தால்தான் வெற்றி. இல்லாவிட்டால் அது அந்த விளையாட்டில் பொய்யானவர்களை சுருட்டி விழுங்கிவிடும்!'

**ஊ**ரிலிருந்து வந்த ஞானம் தந்தியைப் பார்த்து அதிர்ந்துவிட்டாள். நெடுநேரம் அவளால் எதையும் பேச முடியவில்லை. லதாவும் சுதாவும்கூட அண்ணன் சரவணனையும், சங்கீதாவையும் அடுத்து அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்றுதான் பார்த்தனர்.

தப்பத் தவறியும் மாடி அறையில் உள்ள தங்கம் பற்றி இருவரும் மூச்சுக்கூட விடவில்லை. ஞானம் அதைக் கேட்டால், அதையும் வீட்டையும் ஒன்றாக சேர்த்தே போலீஸில் ஒப்படைக்கச் சொல்லலாம் என்கிற பயம்.

''என்னம்மா பண்ணட்டும்?'' - சரவணன் ஞானத்தை நிமிண்டினான்.

''எனக்கு என்ன பதில் சொல்றதுன்னே தெரியலப்பா. பாவம்... ரொம்ப நல்ல மனுஷன். அவருக்குப் போய் இப்படி ஆனதை நினைச்சா ரொம்ப வருத்தமா இருக்குது.''

''வருத்தப்பட்றது ஒரு பக்கம் இருக்கட்டும். என்ன செய்யலாம். சொல்லுங்க...''

''அவர் ஆத்மா சாந்தியடையணும்னா நீ போய் அவர் உடைமைகளை வாங்கிக்கிட்டு அவருக்கும் கர்மம் பண்ணிட்டு வர்றதுதான் நல்லதுன்னு படுது எனக்கு...''



''என்னம்மா நீங்க... போலீஸ்ல நான் யாருன்னு கேட்டா என்ன சொல்றது?''

''அவர் வீட்ல குடி இருக்கற டெனன்ட்ன்னு சொல்லு.''

''அப்படிச் சொன்னா அவர் உடைமைகளைத் தரமாட்டோம்னு சொல்லிட்டா...?''

''அவருக்கு யாரும் கிடையாது. நாங்கதான் இருக்கோம்னு சொல்லு.''

''அப்படிச் சொன்னா ஒத்துக்குவாங்களா?''

''ஒத்துக்கிட்டா வாங்கிட்டு வா. இல்லைன்னா விட்டுடு.''

''அந்த சாமானை விட்டுடுங்க. இந்த பங்களாவை என்ன எண்றது?''

''என்னப்பா கேள்வி... நாலு பெரியவங்களைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொல்வோம். பெரியவங்க சொல்ற மாதிரி செஞ்சுடுவோம்.''

ஞானம் துளிகூட நேர்மை பிசகாமல் பேசினாள். ஆனால், சங்கீதாவோ அதற்கு நேர் எதிராக சிந்தித்தாள். அவர் உயிரோடு இருந்தவரைதான் அவரைப் பற்றிய பயங்கள் அவளை ஆக்ரமித்துக் கொண்டிருந்தன.

அவர் போய்விட்ட நிலையில் பங்களாவும் அந்தத் தங்கமும் அவள் மடியில் விழுந்த குபேர சொத்தாகத்தான் அவளுக்குள் எண்ணங்களை வளர்த்தன. எனவே ஒரு புது முடிவுக்கு வந்தவள் சட்டென்று கணவனை தனியே அழைத்து காதைக் கடிக்க ஆரம்பித்தாள்.

''என்னங்க... நீங்க உடனேயே காசிக்குப்போய் அந்த பெட்டியை வாங்கிக்கிட்டு வந்துடுங்க. போலீஸ்ல கேட்டா டெனன்ட்டுன்னுல்லாம் சொல்லாதீங்க. அந்த பெரியவரோட பேரன்னு சொல்லுங்க....''

''என்ன சங்கீதா இது... தந்தியை பாக்கறதுக்கு முந்திவரை அவரை ஒரு கடத்தல்காரர்னு சொன்னே. இப்ப இப்படி பல்டி அடிக்கறே...?''

''இதுக்குப் பேர் பல்டி கிடையாது; புத்திசாலித்தனம். அவரைப் பத்தி நான் சொன்னதும் தப்புங்க. அவர் தப்பான ஆளா இருந்தா சொன்ன மாதிரி ஸ்தல யாத்திரை போயிருக்கமாட்டார். எங்கையாவது தலைமறைவாகி யிருப்பார். அவர் நல்ல மனுஷன்னுதான் தோணுது. இந்த நகை, தங்கமெல்லாம் அவரோட பூர்வீக சொத்தாகக்கூட இருக்கலாம். எது எப்படியோ... நான் அம்பது பவுனுக்குத்தான் ஆசைப்பட்டேன். ஆனா அம்பது கோடிக்கு இப்ப சொத்து நமக்குக் கிடைக்கப்போகுது. இந்த பங்களாவுக்கும் வாரிசுங்க கிடையாது. அங்க போலீஸ்ல பேரன்னு சொல்லி ரிக்கார்டும் பண்ணிடுங்க. நாளைக்கு யாராவது கேட்டா சொல்றதுக்கு அதுவே பெரிய எவிடென்ஸா நிக்கும். அப்படியே அங்கையே உக்காந்து கர்மகாரியமும் பண்ணிட்டு வாங்க. இதெல்லாம் இப்ப நாம் செய்தாதான் நமக்கு பலம். சொல்றதக் கேளுங்க...''

''சங்கீதா... உனக்கு உடம்பெல்லாம் மூளைடா... ஆமா... அம்மா நம்ம திட்டத்துக்கு ஒத்துக்குவாங்களா?''

''அம்மாவை நான் பாத்துக்கறேன். நீங்க கிளம்புங்க.''

''நீ என்ன சொன்னாலும் அம்மா ஒத்துக்கமாட்டாங்க. இது நமக்கு சொந்தம் இல்லாத சொத்து. ஆகையால் இதை



கவர்ன்மெண்ட்கிட்ட ஒப்படைக்கறதுதான் சரின்னு வாங்க...''

''அதை எல்லாம் நான் பாத்துக்கறேன்னு சொல்லிட்டேன்ல. தேடி வந்த லட்சுமியை நான் விடமாட்டேங்க. என்ன ஆனாலும் சரி...''

''அது சரி... ஆனா அம்மாவை எப்படி வழிக்குக் கொண்டு வருவே...? அதை மட்டும் சொல்லு.''

''அதை இப்ப என்னால் சொல்ல முடியாது. நீங்க போய்ட்டு வாங்க. வரும்போது பாருங்க. அம்மாவால நமக்கு ஒரு தொந்தரவும் இருக்காது. ஊர் உலகமும் பூர்வீக சொத்து ஒண்ணு உங்களுக்குக் கிடைச்சு நீங்க நல்லா வந்துட்டீங்கன்னு சொல்லும். இதுதான் நடக்கும்.''

''நிச்சயமா அப்படித்தான் நடக்குமா?''

''நிச்சயமாவும் அப்படித்தான் நடக்கும், சத்தியமாவும் அப்படித்தான் நடக்கும்.''

''நீ சொல்றத நம்பித்தான் நான் போறேன். இங்க நீதான் அம்மாவை வழிக்குக் கொண்டு வரணும்.''

''கவலையேபடாதீங்க. ஊர்ல இருந்து வந்தவுடனே நீங்க உங்க வீணாப்போன வேலையையும் விட்டுடலாம்''.

சங்கீதா அப்பொழுதே ஒரு கோடீஸ்வரி ஆகிவிட்ட மாதிரி பேசினாள். அவன் பார்த்து வரும் வேலைகூட அவளுக்கு வீணாய்ப் போன வேலை ஆகிவிட்டது.

சரவணனும் கோவில் மாடுபோல தலையை ஆட்டிவிட்டு புறப்பட்டான். இருவரும் குசுமுசுவென்று

பேசியதை கவனித்துக் கொண்டிருந்த லதாவும் சுதாவும் ஞானத்திடம் சென்றனர்.

''அம்மா... அண்ணனும் அண்ணியும் எதுக்காகம்மா இப்படி தனியா போய் பேசிக்கறாங்க...''

''இது என்னடா கேள்வி? போய் உன் அண்ணியையே கேள். அவளே பதில் சொல்லட்டும்.''

''இதை கேட்டுத்தான் தெரிஞ்சுக்கணுமா? அண்ணி, அண்ணனை நல்லா பிரெய்ன்வாஷ் பண்ணுதுன்னுதான் நான் நினைக்கிறேன்.''

''என் பையனை யாரும் எதுவும் பண்ண முடியாது. நீங்க கவலையேபடாதீங்க...''

''என்னம்மா நீ... அண்ணியைப் பத்தி தெரிஞ்சுமா இவ்வளவு நம்பிக்கையா பேசறே நீ?''

''சரி இப்ப என்ன பண்ணச் சொல்றீங்க...?''

''நாங்க சொல்ல என்ன இருக்கு...? அண்ணி நிச்சயமா ஏட்டிக்குப் போட்டியா பேசப் போறாங்க. அப்ப தெரியத்தானே போகுது?''

அவர்கள் சொன்ன மாதிரிதான் ஆனது.

சங்கிதா ஞானத்தைத் தேடிவந்து எதிரில் சற்று அலட்சியமாகவே உட்கார்ந்தாள்.

''அத்தை உங்ககிட்ட சில முக்கியமான விஷயங்களை சொல்லணும்.''

''என்னம்மா...?''

''கொஞ்ச நாளாகவே நம்ம வாழ்க்கை நாம நினைச்ச திசைல போகல. நம்மை எப்படி எப்படியோ இழுத்துக் கிட்டுப் போகுது. இல்லையா?''



''சொல்லு...''

''எனக்கென்னவோ பயமா இருக்குது. நாம சும்மா இருந்தாலும் விதி விடுவேனாங்குது. இப்ப பாருங்க... இவ்வளவு பெரிய வீடும் இப்ப நம்ம கைல...''

''வாஸ்தவம்தாம்மா... ஆனா அதை நாம கவர்ன்மெண்ட்கிட்ட ஒப்படைக்கிறதுதான் மரியாதை''.

''நானும் அதைத்தான் சொல்ல வந்தேன்''- என்று இன்ப அதிர்ச்சியளித்தவள் லதாவும் சுதாவும் பார்க்க,

''ஏய்! நீங்க இரண்டு பேரும் போய் உங்க வேலையைப் பாருங்க... எதுக்கு இப்படி வாயைப் பாக்கறீங்க...?''

-என்று அவர்களை சுண்டிவிட்டு அந்தப் பக்கம் போகச் சொன்னாள். அவர்களும் முறைப்புடன் விலகினர்.

''இப்ப அவங்கள எதுக்கும்மா போகச் சொல்றே?''

''காரணமாத்தான் அத்தை. நான் இப்ப சொல்றதை நல்லா கேட்டுக்குங்க. இந்த பங்களா இப்ப நமக்குக் கிடைச்சிருக்கிற ஒரு பரிசு. இதை கவர்ன்மெண்ட்டுக்கு கொடுக்க நினைக்கறது முட்டாள்தனம். உங்க பிள்ளை இதை உங்ககிட்ட நேர்ல சொல்லத் தயங்கினாரு. என்கிட்ட சொல்லி சொல்லச் சொன்னாரு. சொல்லிட்டேன். ஆனா, நீங்க என்ன முடிவு எடுத்தாலும் சரி...''

-சங்கீதா ஆழம் பார்க்கிற மாதிரி பேசிவிட்டு மேஜை மேலுள்ள புத்தகம் ஒன்றை எடுத்து புரட்டத் தொடங்கினாள்.

-ஞானம் முகம் அதைக் கேட்டு இருண்டுவிட்டது.

''நிச்சயமா சரவணன் இப்படி சொல்லியிருக்க மாட்டான். தனக்கு சொந்தமில்லாத ஒண்ணை அவன் எப்பவும் அடைய ஆசைப்படமாட்டான். எப்ப செஞ்ச பாவமோ நான் என் வீட்டுக்காரரைப் பிரிஞ்சு தனியா வாழ்ந்துக்கிட்டிருக்கேன். இதுக்கு மேலயும் பாவம் பண்ணி நான் நிரந்தரமா அவரைப் பிரியத் தயார் இல்லை. உழைப்புல கிடைக்கிறது காலணாவா இருந்தாலும் சரி. அது போதும்''.

''அப்ப அந்த பத்து லட்சத்தை போலீஸ்கிட்ட ஒப்படைச்ச மாதிரி இதையும் கொடுத்துடலாம்னு சொல்றீங்களா...?''

''நிச்சயமா...''

''உங்க முடிவுல மாற்றமில்லையா?''

''என்னை யாராலையும் மாற்ற முடியாது.''

''ஒருவேளை உங்க மகன் உங்க கருத்தை ஏத்துக்காம உங்களையே ஒதுக்கினா...?''

''உண்மையைப்போய் போலீஸ்ல சொல்வேன்...''

''அப்படி சொன்னா உங்க மகன் குற்றவாளியா யிடுவார் அத்தை...''

''எப்ப அடுத்தவங்க சொத்துக்கு ஆசைப்பட்டானோ அப்பவே அவன் குற்றவாளியாகிட்டான்னுதானே அர்த்தம்?''

''நல்லா யோசியுங்க அத்தை. இந்த வீடு கோடிக் கணக்குல போகும். அதுக்கு மேலையும் இந்த வீட்ல நகை நட்டெல்லாம் இருக்கு...''

''எது இருந்தா என்ன...? எல்லாம் இனி கவர்ன்மெண்ட்டுக்குத்தான் சொந்தம்...''



''அப்ப அவர் காலம் பூரா மாசச் சம்பளத்துக்கு கஷ்டப்படணும். அதுதான் உங்க முடிவா?''

''தப்பு பண்ணிட்டு ஒரு பாவியாக கஷ்டப் பட்றதைவிட இது ஒண்ணும் பெரிய கஷ்டமில்லைம்மா...''

''பாவம் புண்ணியமெல்லாம் நாம பாக்கற பார்வைலதான் இருக்கு. புலி, காட்டுல மானை அடிச்சு தின்னுது. அது பாவம் பார்த்தா பிழைக்க முடியுமா?''

''ஆறறிவுள்ள மனுஷனை அஞ்சறிவு பிராணிகூட ஒப்பு வைக்கிறியே. அதுகூட தேவைக்குத்தான் அப்படிச் செய்யுது. அடுத்த வருஷத்துக்கு இப்பவே சேத்து வெச்சுக்கறதில்ல.''

-ஞானம் துளிகூட சளைக்காமல் பதிலைச் சொன்னாள். சங்கீதா முறைத்துப் பார்த்துவிட்டு எழுந்தாள்.

இனி பேசுவதில் பிரயோஜனமில்லை என்று புரிந்தவளைப் போல எழுந்து அவளது அறைக்குச் சென்றாள். படுக்கையும் தலையணையும் கண்ணில்பட்டது.

தலையலணையையே உற்றுப் பார்த்தவள் ஒரு புதிய முடிவுக்கு வந்தவளைப்போல அதை எடுத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள்.

மனக்கண் அந்தத் தலையணையால் மூச்சுத் திணறி ஞானம் உயிர்விடப் போவதை ஒருமுறை எண்ணிப் பார்த்தது.

எதையும் சொல்லாமல் சொல்வதுதான் இப்போது ஒரே வழி.

# 10

'சிலரின் விதி தன் வாலை, தானே விழுங்கும் பாம்பைப் போன்றது.'

நேரம் ஓடிக் கொண்டிருந்தது. சங்கீதா தூக்கம் பிடிக்காமல் தான் மனதுக்குள் நினைத்ததை செய்துவிடும் எண்ணத்துக்குள் அலை பாய்ந்து கொண்டிருந்தாள்.

குறுக்கும் நெடுக்குமாய் நடை!

நடுவில் அவ்வப்போது ஞானமும், நாத்தனார்களான லதாவும், சுதாவும் என்ன செய்கிறார்கள் என்கிற பார்வை. லதாவும் சுதாவும் டீ.வி. பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஞானம் அன்றைக்கு என்று பார்த்து ராமாயண புத்தகம் ஒன்றை எடுத்துக் கொண்டு ஆழ்ந்து படிக்கத் தொடங்கியிருந்தாள்.

எப்படியும் படுப்பதற்கு பத்து மணிக்கு மேல் ஆகும் என்று தோன்றியது. கடிகாரத்தைப் பார்த்தாள். மணி எட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. புத்தியில் மளுக்கொன்று ஒரு சிவப்பு விளக்கு வேறு எரிந்தது.

குறுக்கும் நெடுக்குமாய் நடந்தவள் திடீரென்று வயிற்றுவலி என்று ஒரு நாடகம் போட ஆரம்பித்தாள். நேராக ஞானத்தின் எதிரில் போய் நின்றாள். ரப்பரைப்போல வளைந்தாள். முகத்திலும் கோணல்கள். ஞானம் நிமிர்ந்தாள்.

''என்ன சங்கீதா... உடம்பு சரியில்லையா?''

''ஆமாம் அத்தை. ரொம்ப வயித்தை வலிக்குது.''



''தயிர்ல வெந்தயம் போட்டுக்குடி. சூட்டு வலியா இருக்கும்.''

''குடிச்சுட்டேன். எதுவும் கேக்கல.''

''சரி என்ன பண்ணப் போறே?''

''டாக்டரைப்போய் பார்த்துட்டு வந்துட்றேன்.''

''ரொம்ப நேரமாயிடிச்சே! டாக்டர் இருப்பாரா...?''

''டாக்டர் ரங்கபிரசாத் பத்து மணி வரைகூட டிஸ்பென்சரில இருப்பார்.''

''சரி வா போகலாம். நானும் வரேன்.''

-ஞானம் புத்தகத்தை மூடிவிட்டு எழுந்தாள். நெற்றியில் புரண்டு விழுந்த நரை முடிக் கற்றையையும் ஒதுக்கினாள்.

''இல்ல அத்தை... உங்களுக்கு எதுக்கு சிரமம்? நான் போய்ட்டு வந்துட்றேன்...'' -வேகமாக ஞானத்தை தவிர்க்கப் பார்த்தாள்.

''எப்படி தனியா இந்த வலியோட போவே... லதாவையாவது, சுதாவையாவது அனுப்பட்டுமா?'' -ஞானத்தின் அடுத்த கட்ட உதவி அவளை மேலும் சங்கடப்படுத்தியது.

''வேண்டாம் அத்தை... நானே பாத்துக்கறேன்...''

-சொன்ன வேகத்தில் புறப்பட்டுவிட்டாள். லதாவும் சுதாவும்கூட டீ.வியிலிருந்து விலகி சங்கீதாவைப் பார்த்தனர். எழுந்து வருவதற்குள் சங்கீதா வாசலைத் தாண்டிவிட்டாள்.

ஞானம் முணுமுணுக்கத் தொடங்கினாள்.

''ஏன் இவ இப்படி விட்டேத்தியாவே நடந்துக்கறா?''

''அண்ணி டாக்டர்கிட்ட போகலை. வேற எங்கேயோ போறாங்க. அதான்''-லதாவிடமிருந்து கச்சிதமான பதில்.

''வேற எங்கையோன்னா...?''

''யாருக்குத் தெரியும்? அவங்க மனசுதான் ஒரு மாயா பஜார் ஆச்சே...''

''என்னவோம்மா. நடக்கற எதுவும் எனக்கு நல்லதா தெரியலை.''

அப்பொழுது குழந்தை வீணா கண்களைக் கசக்கியபடி அவர்களை நோக்கி வந்தாள்.

''அம்மா எங்கே அத்த?''-கேட்டாள்.

''உங்க அம்மா வெளிய போயிருக்காங்க. வந்துடுவாங்க. நீ படுத்து தூங்கலையா?''

''தூக்கமே வரலை. ஆமா அப்பா எப்ப வருவாங்க?''

''இன்னிக்குத்தானே காசிக்கு போயிருக்கான். வர்றதுக்கு எப்படியும் இரண்டு நாள் ஆயிடும். நீ போய் படு...'' - லதாவும் சுதாவும் அவளை சமாளிக்க முயல, குழந்தையின் பார்வை ஞானத்தின் மடியின்மேல் இருந்த புத்தகத்தின் மேல் சென்றது.

''ஹை... மாடி ரூம் புத்தகம்...'' என்றது உடனே.

''மாடி ரூம் புத்தகமா?''

''ஆமாம் அத்தை... மாடியில ஒரு ரூம் இருக்குல்ல? அங்க இந்த மாதிரி நிறைய புத்தகங்கள் இருக்கு.''

குழந்தை-அவர்கள் எதிர்பாராத அதிர்ச்சியை அளித்தது.



''நீ எந்த ரூமை சொல்றேடா கண்ணு...''

''வாங்க காட்றேன்...'' வீணா லதாவின் கையையும் சுதாவின் கையையும் பிடித்து இழுத்தது. அவர்களும் அதன்பின்னே சென்றனர். ஞானம் மட்டும் சற்று கலங்கிப் போனாள்.

''ஏய்... அந்தப் பெரியவர் சொன்ன ரூமா இருந்தா அதுக்குள்ள போய்டாதீங்க...'' -அலறினாள்.

''அதெல்லாம் போகமாட்டோம். நீங்க தைரியமா இருங்கம்மா...''-என்றார்கள் இருவரும் படியில் ஏறிய படியே. ஞானம் அவர்கள் மேல் வைத்த பார்வையை விலக்கவேயில்லை.

அவர்கள் மேலேறி வளைந்து திரும்பி ஞானத்தின் பார்வையை விட்டும் மறைந்தார்கள்!

ஞானத்திற்கு இருப்பு கொள்ளவில்லை.

ராமாயண புத்தகத்தை மோடாமேல் வைத்துவிட்டு அவளும் பின்தொடர்ந்தாள்.

**அ**ந்தப் பெரியவரான உபாசகர் சக்தி பெருமாள் சொன்ன அதே அறை. முன்னால் நின்று கொண்டு வீணா கையை நீட்டிக் காட்டியது.

''இந்த ரூம்லதான் அத்தை நிறைய புத்தகம் இருக்கு.''

''ஆமா... நீ பார்த்தியா?''

''பார்த்தேன். அம்மாகூட ஒருநாள் இதுக்குள்ள போய் எல்லாத்தையும் பாத்துக்கிட்டிருந்தாங்க...''

''நிஜமாவா?''

''ஆமாம்...'' -குழந்தை வீணா ஆமோதிக்க ஞானமும் வந்து சேர சரியாக இருந்தது.

''அம்மா... கேட்டியா?''

''கேட்டேன்... சங்கீதா தப்பு பண்ணிட்டா...''

''அவங்க என்னிக்கு எதுல நல்லது பண்ணியிருக்காங்க-இந்த விஷயத்துல தப்பு பண்ணாம இருக்க?''

- சுதா பதிலோடு அறைக் கதவைப் பார்த்தாள். பேருக்குப் பூட்டு தொங்கிக் கொண்டிருந்தது.

''ஆமா... அந்த பெரியவர்தான் செத்துப் போய்ட்டாரே! உள்ளே போய் என்ன இருக்குன்னு பார்த்தா என்ன?''-லதா ஒரு தினுசாக ஆரம்பித்தாள்.

''வாயை மூடுங்கடி. நம்பள நம்பி ஒப்படைச்சுட்டு போயிருக்கார் அவர். இப்ப அவர் உயிரோட இல்லைன்னாலும் இதைத் திறந்து பாக்கறது தப்புதான்.'' -ஞானம் அழுத்தமாகவே சொன்னாள்.

''எப்படிம்மா தப்பாகும்? எப்படி இருந்தாலும் இன்னிக்கு இல்லை-நாளை திறந்தாதானே அவர் எதுக்காக அப்படி சொன்னார்ங்கறதும் நமக்குத் தெரியும்?''

''எல்லாம் சரவணன் வந்த பிறகு பேசிக்கலாம். பேசாம வாங்க.''-ஞானம் கோபத்தோடு அவர்களை போகச் சொல்லிவிட்டு அறையைப் பார்த்துவிட்டு ஒரு பெருமூச்சு விட்டாள்.

பின் கீழே வந்தாள். மீண்டும் ராமாயண புத்தகத்தை எடுத்துக் கொண்டாள். அதே சமயம் வீணா சங்கீதாவின் அறையில் இருந்து ஞானத்தின் கையில் உள்ளதைப் போலவே ஒரு புத்தகத்தை எடுத்து வந்தது.



''இது என்னடா புத்தகம்?''

''அந்த ரூம்ல இருந்த புத்தகம் இது. அம்மா இதை ராத்திரியெல்லாம் படிச்சுக்கிட்டிருந்தாங்க.''

''அப்படியா...?'' - கேள்வியோடு அந்த புத்தகத்தை வாங்கிப் புரட்டினாள்.

'எண்ணின் மர்மங்கள்.'-புத்தகத்தின் தலைப்பே மிரட்டலாக இருந்தது. உபாசனாமூர்த்தி தர்மராஜர் எழுதியது என்று அதற்குக்கீழே எழுதியவரின் பெயர் இருந்தது. லதாவும் சுதாவும் அதை ஆளுக்கு ஆள் பிடுங்க முயன்றனர். இறுதியில் லதாதான் ஜெயித்தாள்.

''நான் படிச்சுட்டு தரேன். அப்புறமா நீ படிக்கலாம்''

-என்று சுதாவை சமாதானப்படுத்தியவளாக புத்தகத்தோடு அறைக்குள் நுழைந்தாள்.

பக்கங்களில் விழ ஆரம்பித்தாள்.

முதல் பக்கத்திலேயே தர்மராஜர் அந்த நூலைப் பற்றிய முன்னுரையை விஸ்தாரமாக எழுதியிருந்தார்:

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' என்கிற ஆன்றோர் வாக்கு ஒன்றும் சாதாரண வாக்கு அல்ல. அதில்தான் நமது வாழக்கைக்குத் தேவையான எல்லாமே ஒளிந்துள்ளது. நமக்கெல்லாம் ஒன்று முதல் ஒன்பது வரை உள்ள எண்களைப் பற்றி அது கணக்கிற்கு பயன்படுவது என்று மட்டும்தான் தெரியும். ஆனால், ஒவ்வொரு எண்ணிற்குப் பின்னாலும் ஒரு மர்மம் உள்ளது. அதைத் தெரிந்து கொண்டால் ஆச்சரியத்திலும் அதிர்ச்சியிலும்

நாம் செயலற்றவர்கள் ஆகிவிடுவோம். எண்களே நம்மை கட்டி ஆள்கின்றன. இதை நான் பத்தாயிரம் பேரிடம் பரீட்சை செய்து பார்த்தேன். ஒருவரிடம்கூட எனக்கு தவறே ஏற்படவில்லை!'

-முன்னுரை சுவாரஸ்யமாக நீண்டு கொண்டே போனது. லதாவும் வைத்த விழியை எடுக்காமல் படித்தபடி இருந்தாள். நேரமும் கரைய அது பத்தைத் தொடும்போது சங்கீதா உள் நுழைந்தாள். வீணாவும் சுதாவும் படுக்கப் போய்விட்டனர்.

ஞானம், அவள் வரவும் ஏறிட்டாள்.

''என்னம்மா... டாக்டரைப் பார்த்தியா?''

''பார்த்துட்டேன் அத்தை. ஊசி போட்டார்...'' -என்றபடியே கையில் இருந்த சில மாத்திரைகளை காண்பித்தாள். அதில் ஞானத்தை ஆழ்ந்த தூக்கத்தில் ஆழ்த்தும் தூக்க மாத்திரைகளும் இருந்தன. வெளியே சென்றதே அதை வாங்கி வரத்தானே?

''ஆமா... இப்ப எப்படி இருக்கு?''

''பரவாயில்ல அத்தை...''

''சரி இப்படி உட்கார்...'' -ஞானம் எதிரில் கை காட்டினாள். ஏதோ பேச விரும்புகிறாள் என்பது சங்கீதாவுக்குப் புரிந்தது.

''என்ன அத்தை?''-உட்கார்ந்தபடியே கேட்டாள்.

''மாடியில திறக்கக் கூடாதுன்னு அந்தப் பெரியவர் சொன்ன அறையை நீ திறந்தியா?''-ஞானம் மிக நேராக



விஷயத்திற்கு வந்த அதே சமயம் லதா தன் அறையில் புத்தகத்தின் முக்கிய பக்கத்தில் இருந்தாள்.

'இந்த எண் கணித புத்தகத்தின் மர்ம எண் சக்கரத்தில் கண்களை மூடிக்கொண்டு ஒரு எழுதுகோலால் ஏதாவது ஒரு எண்ணைத் தொட வேண்டும். அந்த எண்ணுக்கான பலன் அடுத்த பக்கத்திலேயே உள்ளது. யட்சினி மூலமந்திரம் மூலமும், வசிய வித்தை மூலமும் உருவாக்கப்பட்ட இந்த மர்ம எண் சக்கரம் உடனேயே அடுத்து நடக்க இருப்பதை சுட்டிக் காட்டிவிடும். நம்பிக்கையோடு நாம் மனதில் எதை நினைத்துக் கொண்டு எண்ணைத் தொடுகிறோமோ அந்தக் கேள்விக்கு சரியான விடையை இந்த எண் சக்கரம் கூறும். ஒருவர் ஒரு சமயம் மூன்று முறை இந்த சக்கர எண்ணைத் தொட்டு பலன் அறியலாம். நான்காம் முறை முயன்றால் பலன் பலிக்காது போய்விடும்.'

-மர்ம எண் சக்கரம் பற்றி இருந்த விளக்கத்தைப் பார்த்துவிட்டு ஆவலான லதா உடனேயே ஒரு பேனாவை எடுத்துக்கொண்டு வந்து அதைப் பயன்படுத்தத் தயாரானாள்.

எதைப் பற்றிக் கேட்கலாம்?

மனதில் ஒரு சின்ன அலை மோதல்...

இறுதியில் பங்களாவை ஒப்புவித்துவிட்டு காசிப் பக்கம் போய் செத்து வைத்த சக்தி பெருமாள் நினைப்புதான் முதலில் முண்டியது. 'உண்மையில் அவர் இறந்து

விட்டாரா...? இறந்திருந்தால் அவர் ஆத்மா சாந்தி அடையுமா...? அம்மா இந்த பங்களாவை அரசாங்கத்துக்குக் கொடுத்துவிடுவதுதான் நல்லது என்கிறாளே-அதுதான் நல்ல முடிவா...?' பெரியவரைத் தொட்டு கேள்விகள் ஒன்றன்பின் ஒன்றாக ரயில் பெட்டிபோல அணிவகுத்தன.

பேனாமுனையும் மர்ம எண் சக்கரத்தின் எண் ஒன்றைத் தொட்டு நின்றது. அது தொட்ட எண் இருபத்து ஒன்பது. உடனே பலனை அறிய அடுத்த பக்கத்தைப் பார்த்தாள்.

'இந்த எண்ணைத் தொட்ட நீ அறியக் கடவது எதுவென்றால், ஓர் உயிரைப் பற்றியதாம். அவ்வுயிரும் இவ்வுலகத்தில் நூறாண்டு ஜீவிக்குமே!'

-பதில் லதாவுக்கு வியப்பைத் தந்தது. பதிலின்படி பெரியவர் இறந்திருக்க வாய்ப்பில்லை என்பதும் புரிந்தது. மளமளவென்று மீண்டும் மர்ம எண் சக்கரப் பக்கத்திற்கு வந்து அடுத்த ரவுண்டுக்கு தயாரானாள்.

வெளியே ஞானம் சோபாவில் மயங்கிய நிலையில் கிடக்கிற மாதிரி தெரிந்தது. சங்கீதா ஞானத்தை சிரமப் பட்டுத் தூக்கி படுக்கை அறைக்குக் கொண்டு சென்று படுக்க வைப்பதில் முனைப்பாக இருந்தாள். இருவருக்கும் இடையில் என்ன நடந்தது என்பது லதாவிற்கான மர்ம சக்கரத்தில் அவள் தொட்ட 88-ஆம் எண்ணிற்கான பலனில் தெரிந்தது.

'ஈரெட்டைத் தொட்டதால் இயம்புவதும்
துராச்சிரமே. பீடுடைய ஓர் உயிர் பிரிந்திடுமே
இக்கணத்தில்!'



-பக்கென்றது லதாவுக்கு. அறைக்கு வெளியே நடந்தது தெரியாமல் வேகவேகமாக மூன்றாவது எண்ணைத் தொட்டாள். அவள் தொட்டதும் பூஜ்யம்.

'தொட்டதும் பூஜ்யமிது கிட்டிய யாவும்
பூஜ்ஜியமாகி எட்டியாய் வாழ்வும் கசந்திடுமே!'

-என்கிற அதன் பலன் அவள் பொட்டில் அடித்தது. நான்காவது முறை முயன்று பார்க்கவும் எச்சரிக்கை தடுத்தது. புத்தகத்தை ஒரு விநாடி மூடியவள் மீண்டும் திறந்தாள். எண் வாரியாக பலன்கள் கண்ணில் படத்தொடங்கின.

'ஒன்றில் பிறந்தவர் சூரியனாவார். நான்கதாம் ராகுவை வளைத்தே பிடித்து அடிமையாய் ஆட்டி வைப்பார். நான்கும் ஒன்றிற்கு திருவடிச் சேவை புரியுமே. ஒரு ஆண் ஒன்றிலும் பெண் நான்கிலும் இருக்க இல்வாழ்வும் இன்ப உச்சிதான்!'

-ஒன்றாம் எண் பலன் அவளுக்கு ஆச்சரியம் தந்தது. சரவணன் நான்காம் எண் காரன். சங்கீதாவோ ஒன்று. அதுதான் சரவணனை அந்த ஆட்டு ஆட்டி வைக்கிறாளோ என்று உடனேயே விளக்கம் உள்ளுக்குள் ஓடிற்று.

ஏனோ அதற்குமேல் படிக்கத் தயக்கமாய் இருந்தது. அந்த புத்தகம் மற்ற புத்தகம் போல் இல்லை. அதில் உள்ள ஒவ்வொன்றும் தேவரகசியம் போன்றது என்று அவளுக்குள் ஒரு குரல் சொல்லிற்று.

அப்படியானால் மர்ம எண் சக்கரத்தைத் தொட்டதில் வந்த பலன்கள் அப்படியே நடக்க வேண்டுமே? நடக்குமா?

கேள்வியை அவள் கேட்டுக் கொண்டபோது கடிகாரத்தில் மணி பதினொன்று.

காலிங் பெல் அலறும் சப்தம் காதில் விழுந்தது. யார் இந்த நேரத்தில்? எட்டிப் பார்த்தாள். சங்கீதா போய் கதவைத் திறந்து கொண்டிருந்தாள். திறந்து கொண்ட கதவுக்கு அப்பால் சக்தி உபாசகர் சக்திபெருமாள்!

பகீரென்றது.

''நீங்களா...நீங்க...நீங்க...''-சங்கீதாவுக்கு நாக்கு குழறியது. அதைப் பார்த்துக் கொண்டிருந்த லதாவுக்கோ உடம்பில் ஒரு புத்துணர்ச்சி ஊறியது போல் இருந்தது.

இப்பொழுதுதான் மர்ம எண் சக்கரத்தில் பலன் வந்தது. அது எப்படியோ பலித்துவிட்டதே! இது என்ன காக்கை உக்கார பனம் பழமா... இல்லை புத்தகம் ஒரு அபூர்வச் சரக்கா?

ஓடி வந்தாள்.

பெரியவரும் சிரித்தபடி உள்ளே வந்தார்.

''என்னம்மா... என்னை இந்த நேரத்துல நீங்க எதிர்பார்க்கலையா?'' - அவரிடம் கேள்வி.

''ஆமாம்... நீங்க எப்படி உயிரோட?''

-சங்கீதாவிடம் குரல் குழறியது.

''என்னம்மா கேள்வி இது? நான் செத்துட்டதா யார் சொன்னது?''

-லதா உடனே ஓடிச்சென்று தந்தியை எடுத்து வந்தாள். காட்டினாள். அதைப் பார்த்த உடனேயே பெரியவரின் முகத்தில் பலத்த சிரிப்பு.



''என்னய்யா சிரிக்கிறீங்க... இந்த தந்திக்கு என்ன அர்த்தம்?''

''இதுவா... இது நான் கொடுத்த தந்திம்மா.''

''நீங்க கொடுத்த தந்தியா?''

''ஆமாம்மா. உங்களை சோதிக்க நான் கொடுத்த தந்தி. நான் செத்துட்டா ஒழிஞ்சான்னு நினைக்கப் போறீங்களா - இல்லை என்னைப் பொருட்படுத்தி கர்மம் செய்வீங்களான்னு தெரிஞ்சுக்க ஆசைப்பட்டேன். அதான் இப்படி ஒரு தந்தியைக் கொடுத்தேன்.'' -பெரியவரின் பதில் லதாவை கோபத்தில் பிடித்துத் தள்ளியது.

''நல்லாருக்கு... என்னய்யா நீங்க. அண்ணன் உங்களுக்காக இப்ப காசிக்கு போயிருக்கார் தெரியுமா?''-சற்று உரக்கவே கத்தினாள் லதா.

''பொறும்மா... நான் ஒண்ணும் காரணமில்லாம விளையாடலை. உங்கப்பா சொல்லித்தான் இப்படிச் செய்தேன்.''

-பெரியவரின் அந்த பதில் இருவரையும் வாயைப் பிளக்கவிட்டது.

''அப்பாவா...எங்கப்பாவா?''-லதா மிக ஆவலாகக் கேட்டாள்.

''ஆமாம்மா... உன் அப்பாவேதான். நான் அவரோட செஷ்யன்!''

''அப்பா இப்ப எங்கே?''

''இருக்கார். இமயமலைச் சாரல்ல ஒரு சமாதியா.''

''என்னது? சமாதியாவா...? என்ன சொல்றீங்க?''

''அவர் மகா சமாதியாகி பல மாசம் ஆயிடிச்சு. சாகறதுக்கு முந்தி உங்க ஞாபகம் வந்து உங்களுக்கு காலத்துக்கும் பயன்பட்ற மாதிரி ஏதாவது பெரிதா உதவணும்னு நினைச்சார். அதேசமயம் பணத்தாசையால நீங்க தரம் தாழ்ந்து போயிடக் கூடாதுன்னும் கவலைப் பட்டார்.

அப்பதான் நான் அவரைப் பார்த்தேன். கவலைப்படாதீங்க. அவங்க வேண்டாம்னு மறுக்கிறது எதுவா இருந்தாலும் அதை நான் அவங்களுக்கு உங்க சார்பா தரேன்னு சொன்னேன். அதுக்காகவே உங்க சார்பா தேடி அலையும்போது அவன் நேர்மையைப் பரிசோதிக்க பணப்பெட்டியை அவன்கிட்ட விட்டேன். அதன்பிறகு இந்த வீட்டையும் உங்க பொறுப்புல விட்டு மாடி அறையையும் திறக்கக் கூடாதுன்னு சொன்னேன். அந்த அறைல பெரிசா எந்த மர்மமும் இல்லை. உங்க அப்பாவோட பக்திக்கும் நேர்மைக்கும் கட்டுப்பட்டு பல பணக்காரர்கள் அவர் காலடியில் கொட்டின தங்கம் வெள்ளிநகைகள்தான் அந்த அறைல இருக்குது. இன்னும் சொல்லப்போனா அவர் தன் யோகசக்தியால் உணர்ந்து எழுதின பல புத்தகங்கள்கூட அங்க இருக்கு. அதெல்லாம் வேத புராண ரகசியங்கள். அதுக்கெல்லாம் ஒரு விலைமதிப்பே கிடையாது.

ஆமா எங்க உங்கம்மா...?''-பேச்சோடு பேச்சாக ஞானம் எங்கே என்று கேட்டவர் எதிரில் சங்கீதா நடுங்க ஆரம்பித்தாள். லதா திரும்பிப் பார்த்துவிட்டு ''தூங்க்றாங்க'' என்றாள்.



''நான் வந்த பிறகுமா தூங்கறாங்க? என் குரல் அவங்க காதுல விழலையாக்கும்?''-பலமாக பெட்ருமை பார்த்தபடி கத்திய சக்திபெருமாளை லதாவும் வெகுவாக ரசித்தாள்.

''இங்க நடக்கற எல்லாமே எனக்கு பிரமிப்பா இருக்கு. எங்க அப்பா பொறுப்பில்லாம எங்களை விட்டுட்டு போய்ட்டார்னு நினைச்சேன். ஆனா அவர் எங்களுக்காக உங்களையே அனுப்பியிருக்கறத நினைச்சா சிலிர்ப்பா இருக்கு...'' என்றாள்.

''எனக்கும்தாம்மா. நான் எவ்வளவு ஆசை காட்டியும் உன் அம்மா மசியலை. சந்தர்ப்ப சூழ்நிலைக்கும் பலியாயிடலை. இந்த வீட்டைப் போல பலகோடி செல்வம் கொடுத்தாலும் நேர்வழியில வராத நிலைல அதை ஏத்துக்கத் தயாரா இல்லாத அவங்கள நான் பாராட்றேன். இனி இந்த பங்களா அந்த மாடி அறை நகைகள் எல்லாமே உன் அம்மாவுக்குத்தான் சொந்தம். அடுத்து அவங்க மகனான சரவணனுக்கு சொந்தம். எல்லாத்தையும் பத்திரமா எழுதி எடுத்துக்கிட்டு வந்துட்டேன். கூப்பிடு அம்மாவை...''

-பெரியவரின் கட்டளையைத் தொடர்ந்து லதா, ஞானம் படுத்திருந்த அறை நோக்கி ஓடினாள்.

கட்டிலில் படுத்திருக்கும் ஞானத்தின் தோளைத் தொட்டபோது ஜில்லிட ஆரம்பித்திருந்தது உடல். அதை உணர்ந்த அவளது அடிவயிற்றில் ஒரு குபீர் அமிலப் பாய்ச்சல்.

''அம்மா... எழுந்திரும்மா. நினைச்சுப் பார்க்க முடியாதது எல்லாம் நடந்திருக்கும்மா. உன் நம்பிக்கையும்

உண்மையும் வீண் போகலை. அப்பா நமக்கெல்லாம் சக்தி உபாசகர் வடிவத்துல வந்து வழியை காட்டிட்டார்மா. எழுந்திரும்மா... எழுந்திரு...''

-லதா பதற்றமும் நடுக்கமுமாய் உசுப்ப, உயிரில்லாத ஞானத்தின் உடல் ஒரு மூட்டைபோல அசைந்தாடியது. ஆனால் கண்ணைத்தான் திறக்கவில்லை.

''ஐயோ அண்ணி... அம்மா எழுந்திருக்க மாட்டேங்கறாங்க. அவங்களுக்கு என்னவோ ஆயிடிச்சு.'' அலறினாள். சங்கீதாவும் ஒன்றும் தெரியாதவள் போல் வந்து பார்த்துவிட்டு ''அத்தை...'' என்றாள் ஓங்கலாய். பெரிய வரும் அருகில் வந்து நாடியை பார்த்துவிட்டு ''அடடா போய்ட்டாங்களே!'' என்று அடிக்குரலில் வருத்தத்துடன் சொன்னபோது லதா அப்படியே நொறுங்கி அமர்ந்துவிட்டாள்.

சங்கீதாவுக்கோ தான்தான் கழுத்தை நெறித்துக் கொன்றோம் என்பது வெளியே தெரிந்துவிடுமோ என்கிற அச்சம்.

இப்படி இந்தக் கிழவர் அர்த்த ராத்திரியில் வந்து கதையையே புரட்டிப் போடுவார் என்றெல்லாம் எதிர்பார்த்திராத ஆச்சரியம், அதிர்ச்சி எல்லாம் அவளைப் போட்டு உழுது கொண்டிருந்தது.

ஊடே தொலைபேசியும் சிணுங்கியது.

'இந்த நேரத்தில் யாராக இருக்கும்?'

தயக்கத்தோடு போய் ரிசீவரை எடுத்தாள்.

காதில் சேதி விழத் தொடங்கியது. முகமும் வெளிறிப் போய் அவளை அப்படியே குப்புறத் தள்ளியது.



''என்ன அண்ணி... என்ன விஷயம்?''

-ஓடி வந்து பரபரக்கக் கேட்டாள் லதா.

''என்னன்னு சொல்வேன் லதா. பட்டகால்லையே படும், கெட்ட குடியே கெடும்னு சொல்வாங்க, அது உண்மை லதா உண்மை.''

''விளக்கமா சொல்லுங்க. போன்ல யார் என்ன சொன்னாங்க?''

''உங்க அண்ணன் போன ரயில்ல குண்டு வெடிச்சிடுச்சாம். அதுல அவர்... அவர்...''

-முழுவதுமாக சொல்ல முடியாமல் சங்கீதா மயங்கிக் கீழே விழுந்தாள். அவள் சொல்லாமலே மீதம் என்ன என்பது அவர்களுக்குப் புரிந்துவிட்டது.

அனைத்தையும் கேட்டு உபாசகர்கூட ஸ்தம்பித்துப் போய்விட்டார். லதா வேகமாக உள்ளே ஓடினாள். 'எண்ணின் மர்மங்கள்' என்கிற அந்தப் புத்தகத்தை தூக்கிக்கொண்டு வந்தவள், ''ஐயா! இது புத்தகம் இல்ல குட்டிச் சாத்தான். இதை நான் படிச்சது-பலன் பார்த்தது எல்லாம் என் தப்பு. மூன்று முறை மர்ம எண் சக்கரத்துல பலன் பார்த்தேன். நேர்எதிரான பலனா வந்து அதேபோல எல்லாம் நடந்து எங்களை பூஜ்யமாக்கிடிச்சு. இப்ப அப்பாவும் இல்லாம, அம்மாவும் இல்லாம, அண்ணனும் இல்லாம நாங்க அநாதை ஆயிட்டோமே...! நாங்க என்னய்யா பண்ணுவோம்?''

புத்தகத்தை விட்டெறிந்தபடியே கத்தினாள். பெரியவர் சக்திபெருமாள் முகத்தில் ஒரு விரக்திப் புன்னகை. அப்படியே ''என் வாக்கை மீறிட்டீங்கபோல

இருக்கே?'' என்னும் கேள்வி. பார்வை, போய் விழுந்த புத்தகத்தின் மேல் இருந்தது.

''நாங்க மீறலை. எல்லாம் எங்க அண்ணியோட வேலை.''

''அதுதான் அந்த சக்தி இவங்களை இப்படி தண்டிச்சுட்டாளா?''

''இவங்கள மட்டுமா... எங்களையும்தானே?''

''கவலைப்படாதம்மா... நான் இருக்கேன். உங்களுக்கு கல்யாணம்னு ஒண்ணு நடந்துட்டா வாழ்க்கை திசை திரும்பிடும். நாலும் தெரிஞ்ச நானே வேடிக்கை பார்ப்பேனா. ஆனா இவங்க நிலைதான்...''

-பெரியவர் சங்கீதாவின் மயங்கிய உடலைப் பார்த்தபடியே சொல்லும் போது அவளிடமும் கண் விழிகளில் மலர்ச்சி.

தூங்கி எழுபவள் போல எழுந்தவள் முகத்தை ஒரு மாதிரி வைத்துக் கொண்டு தலையைச் சொறிந்தபோது பெரியவருக்கு புரிந்து போயிற்று.

அவளது புத்தி அதிர்ச்சியில் பிசகிவிட்டது.

அதீத ஆசை... சுயநலம்... இப்படித்தான் முடியுமோ?

தூர விழுந்து கிடந்த புத்தகத்திடம் கூட படபடப்பு. பெரியவர் போய் அதைக் கையில் எடுத்தார். மடக்கி பத்திரமாய் பக்கத்து ஷெல்ப்பில் வைத்துவிட்டு வந்து ஞானத்தை அடக்கம் செய்வதற்கான பணிகளில் இறங்க ஆரம்பித்தார்.

★★★